*17*

# “ஞானவான்களாய் நடந்து கொள்ளுங்கள்”

# (பாகம் 1)

## (5:15-33)

*எபேசியர் புத்தகத்தின் கடைசி பெரிய பகுதி (5:15-6:20) யில் அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடப்பட்ட திட்டங்களை வகுத்து நல்ல கிறிஸ்தவ உறவுமுறையை தொடர்ந்து செயலாற்றவும் தீமைக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும் ஆலோசனைகளை முன் வைக்கிறார். நிருபத்தின் நான்காவதும் இறுதியுமான கட்டளை குறிப்பிட்ட வழியில் “நடக்கும்படி” 5:15ல் கொடுக்கப்பட்டது.*

## தேவன் மீதும் மற்றவர்கள் மீதும் கவனம் செலுத்தி வாழ்தல் *(5:15-21)*

***“காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்” (5:15, 16)***

***15 ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, 16 நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.***

***வசனங்கள் 15, 16.*** *முதல் மூன்று புத்திமதிகளும் எபேசியர்கள் நடக்கவேண்டிய முறைகளைப் பற்றியது, அல்லது வாழ வேண்டிய முறைப்படி வாழ்வதைப் பற்றியது, “அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய்” நடந்து கொள்ள வேண்டும், “அன்பிலே” நடந்து கொள்ள வேண்டும், மற்றும் “வெளிச்சத்தின் பிள்ளைகளாய்” நடந்து கொள்ள வேண்டும். நான்காவது அறிவுரை என்னவெனில்* ***கவனமாய் நடந்து கொள்ளப்பாருங்கள்.*** *(கவன) “மாய்” என்பதற்கு ஆங்கிலத்தில்* ‘‘be’’ (Careful) *என்று சொல்லப்பட்டது. கிரேக்க மொழியில் இது ஒரு கண்டிப்பான தொடர் நிகழ்ச்சியைக் குறிப்பிடும்படி* ‘‘be’’ (*blepete*) *மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் அதைத் “தொடர் நிகழ்ச்சியாக அல்லது மறுபடியும் மறுபடியும் செயல்படும் காரியமாகக்” குறிப்பிட்டார்.*[1] *அதன் பொருள் “மனரீதியாக நிதானித்தல், கவனித்துப்பார்த்தல், மனதால் உணருதல், பரிசீலித்தல், தொடர்ந்து*

*ஆழ்ந்து கவனித்தல், எச்சரிக்கையாய் நடந்து கொள்ள ஏதுவாக கவனித்துப் பார்த்தல், எச்சரிக்கையாயிருத்தல்."*[2] *"கவனம்" என்ற வார்த்தை akribōs என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, அது "பெரிய பிரயாசத்தை எடுத்துக் கொள்ளுதல், கவனம், விழித்திருத்தல்" ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட வார்த்தை மற்றும் சரி "நுட்பமான" "சரியான" என்பவைகளோடும் சம்பந்தப்பட்டது.*[3] *விசுவாசி தேவனுடைய வசனத்தின் வரையறைக்குள்ளாக தனது நடக்கையில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டியவன், இந்த புத்திமதி யோசுவாவுக்கு தேவன் அவசியமாகக் கொடுத்த கட்டளையின் போது சொன்னது போன்றது. அவர், "... நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமானதாயிரு ... அதை விட்டு வலது புறம் இடது புறம் விலகாதிருப்பாயாக" என்றார் (யோசுவா 1:7). வசனப்பகுதியில் குறிப்பிடப்படுகிற ஞானமாய் நடந்து கொள்ளப் பார்த்து, என்று சொல்லிய அப்போஸ்தலனின் உபதேசம் இயேசு சொன்ன வார்த்தைகளை மனதில் கொண்டு வருகிறது. அவர், "ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்," என்று சொன்னார் (மத்தேயு 7:24).*

*"கவனமாய் நடந்து கொள்வது எப்படி" என்றால்* **ஞானமற்றவர்களைப் போல நடப்பதை தவிர்த்து ஞானமுள்ளவர்களாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.** *கிரேக்க எச்சவினையில் exagorazomenoi, ஒரு அமைப்பாக exagorazō என்பதன் பொருள், "தனக்கென வாங்குதல்"*[4] *என்பதாகும், மேலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நன்மை செய்யவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஞானத்தோடும் புனிதமாகவும் பயன்படுத்திக் கொள்வது, "அதினால் வைராக்கியமும் நல்லது செய்வதும் பணத்தை வாங்குவதுபோல காலம் நமது கையில் இருக்க வேண்டும்."*[5]

*காலத்தை நாம் பிரயோஜனப்படுத்திக் கொள்ள தூண்டு விசையாயிருப்பது* **நாட்கள் பொல்லாதவைகளாயிருப்பதே.** *இதற்கு முன்பு, பவுல் துன்மார்க்க உலகம் "ஆகாயத்துப் பிரபுவாகிய ... கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற ஆவியின்" வல்லமைக்குக் கீழாக வாழ்ந்து கொண்டுள்ளது (2:2) என்று குறிப்பிட்டார். பொல்லாங்கு நிறைந்த இந்த உலகில், கிறிஸ்தவர்களாகிய நாம் தேவன் எதற்காக நம்மை அழைத்தாரோ அந்த வாழ்க்கையை வாழ வேண்டும். நற்கிரியைகளைச் செய்ய கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (2:10). காலமோ அளவிடப்பட்டது, நற்கிரியை செய்ய ஏதுவான சந்தர்ப்பங்களோ ஏராளமாயிருக்கிறது, தீமை சூழ்ந்து கொண்டுள்ளது; எனவே கிறிஸ்தவர்கள் தாங்கள் யார், என்னவாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து தங்களால் இயன்ற அளவுக்கு தங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*அடுத்ததாக, பவுல், ஞானமாய் நடந்து கொள்ள, கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் (5:17) மற்றும் அவருடைய ஆவியினாலும் நிரப்பப்பட வேண்டும் (5:18) என்று காட்டினார்.*

### *“கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்” (5:17)*

**[17]ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

*வசனம் 17. எபேசு கிறிஸ்தவர்கள் **கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ள வேண்டியவர்களாயிருந்தனர்.** தீமை நிறைந்த இந்த உலகில் நன்மை செய்ய ஒரு நபருக்குக் கிடைக்கிற சந்தர்ப்பத்தை அனுகூலமாக்கிக் கொள்ள வேண்டும். மதியற்றவர்களாயிராமல் ஞானமுள்ளவர்களாய் நடக்க, அவர் தேவனுடைய போதனையை அறியவேண்டும். எபேசியருக்கு அந்நிருபத்தில் பவுல் எழுதினவைகள் “கர்த்தருடைய சித்தத்தில்” பழக்கப்பட ஏதுவாக எழுதப்பட்டவை. கொலோசெயர்களுக்காக பவுலின் ஜெபம் அவர்கள் “எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவிலே நிரப்பப்பட வேண்டும்” என்பதாக இருந்தது (கொலோசெயர் 1:9). கொலோசெயர்களும், எபேசியர்களும், தேவனுடைய சத்தியத்தை அறியவும், அவைகளைப் புரிந்து கொள்ளவும், அவைகளை முறையாய் அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் வேண்டுமென்று விரும்பினார்.*

*வேத வசனங்களைக் கவனமாகப் படிப்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் இன்று, கர்த்தர் அவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார் என்று கண்டுபிடிக்கிறார்கள். ஞானத்துடன் கவனமாக நடத்தல் என்பது வசனத்தை அறிந்து கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் மற்றும் அதன்படி வாழ்வதுமாக எப்போதும் இருந்தது.*

### *“ஆவியினால் நிரப்பப்பட்டிருங்கள்” (5:18-21)*

**[18]துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; [19]சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, [20]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, [21]தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.**

*அடுத்ததாக பவுல் “ஆவியினால் நிரப்பப்படுவதன் அவசியத்தைக்” கொடுத்தார். 5:19-21ல் மூன்று எச்ச வினைகளைப் பயன்படுத்தி அப்படிச் செய்வதன் விளைவுகளை விளக்கப்படுத்தினார். விசுவாசத்தில் வளருகிற கிறிஸ்தவர்கள் பாடல்களில் தங்கள் நன்றிகளைச் செலுத்தி, எல்லாவற்றிக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தி, சகோதர அக்கறையில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து தங்கள் ஒத்துழைப்புகளை நல்கிக் கொள்கின்றனர்.*

*வசனம் 18. ஞானத்தினாலே கவனமாய் நடந்துகொள்ளுதல் **ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதையும் உள்ளடக்கியது.** பவுல் எதிர்மறையில் துவங்குகிறார்: **மதுபான வெறிகொள்ளாதிருங்கள்.** மதுபான வெறிகொள்வது மதியற்றவர்களின் வாழ்வு முறைக்கு*

உரியவையேயன்றி, ஞானவான்களுக்குரியதல்ல. இருளுக்குரியவர்கள் மதுபான வெறிகொண்டவர்களாய் ஒருவேளை இருக்கலாம், வெளிச்சத்துக் குரியவர்கள் மனத்தெளிவுடன் இருப்பார்கள் (காண்க ரோமர் 13:12, 13; 1 தெசலோனிக்கேயர் 5:6-8). மதுபானம் பண்ணுதல், ஒருவரை வெறிகொள்ளச் செய்கிறது, என்று பவுல் சொன்னார் (*asōtia*) இந்தக் கிரேக்க வார்த்தை (*soizo,* "இரட்சிக்க" "காப்பாற்ற" "பாதுகாக்க" ஆகியவற்றோடு தொடர்புடையச் சொல்);[6] ஆனால் எதிர் மறை முற்சேர்க்கையில் *alpha* வுடன் சேர்த்து சொல்லப்படுகிறது. *Asōtia* என்பது "வீணாவதை" அல்லது "அக்கறையற்று அந்தரத்தில் விடுதல்" என்பதைக் குறிக்கிறது. "மதுபானம் பண்ணுவதில் ஒழுக்கநெறி எதுவுமில்லை, மாறாக கைவிடப்படுதலையும், ஒழுக்கக்கேடான வேட்கையையும்"[7] கட்டுப்படுத்தக் கூடாத, மற்றும் வீணாக்கப்பட்ட வாழ்க்கையுமே, என்று பவுல் கூறிக்கொண்டிருந்தார். ஒரு நபர் தனது மனதில் இருக்கிற அதிக பட்ச எண்ணங்களால் கட்டுப்படுத்தப்படுகிறார், ஓயினை குடித்தே தீர வேண்டும் என்ற ஆவல் கொண்ட கண்ணோட்டம் அவருக்கு இருக்குமானால், பிறகு அவர் இரட்சிக்கப்பட வாய்ப்பில்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதற்கு மாறாக, "ஆவியினால் நிரப்பப் பட்டிருக்கும்" ஒருவர் தேவபக்திக்குரிய வாழ்க்கையை நடத்துகிறார்.

"நிரப்பப்படுதல்" (*pleroo*) என்பது இருக்கிற இடம் எல்லாவற்றையும் பிடித்துகொள்ளுதல், "மீன்களால் நிரப்பப்பட்ட வலைபோல (மத்தேயு 13:48), வீட்டை நிறைக்கும் வாசனைத் தைலம்போல (யோவான் 12:3); பள்ளத்தாக்கு நிரப்பப்படுவதுபோல (லூக்கா 3:4)."[8] ஞானமுள்ளவர்களாய் வாழ்வதற்கும், அல்லது மதியற்றவர்களாய் வாழ்வதற்கும், இடையில் உள்ள வித்தியாசம், கவனமுடன் அல்லது அலட்சியமாக வாழ்வதற்கும் உள்ள வித்தியாசம், "ஆவியினால் நிரப்பப்படுதலை" ஏற்றுக் கொள்ளுவதைப் பொறுத்ததே.

"ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பது" "மது பானத்தால் வெறி கொண்டிருப்பதற்கு" முரணானது. ஒரு மனிதனுடைய மனதை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காரியம் நல்லதற்காயினும் கெட்டதற்காயினும் அவனுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகிறது. கிறிஸ்தவன் "ஆவியினால் நிரப்பப்பட" தொடர்ந்து திறந்த மனமுடையவனாயிருக்க வேண்டும். இந்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது "பரிசுத்த ஆவியின் வரத்தைப்" பெறுவதிலிருந்து வித்தி யாசப்பட்டது, ஆவியின் வரம் ஞானஸ்நானத்தின் போது பெறப்படுவது (நடபடிகள் 2:38). ஆவியின் வரம் என்பது ஆவியானவரையே குறிக்கிறது, விசுவாசிக்குக் கொடுக்கப்பட்டு அவனுக்குள் வாசம் பண்ணுகிறார் (நடபடிகள் 5:32; 1 கொரிந்தியர் 6:19). பவுல் முன்னதாகக் குறிப்பிட்டு எபேசியருக்குச் சொன்ன இந்த வரம், உள்ளான மனுஷனை ஆவியின் வல்லமையின் மூலம் பெலப்படுத்துவது அதன் நோக்கம் (3:16). கிறிஸ்தவனின் வாழ்க்கையில் ஆவியின் வல்லமை அவனுடைய ஆவலின் அடிப்படையில் ஆவியானவரின் உதவியைக் குறித்த உறுதியான நம்பிக்கையிலும் அவன் தேவனுடைய கட்டுப்பாட்டிலும் இருக்கச் செய்கிறது. மதுபான வெறியன் மதுபானம் தன்னைக் கட்டுப்படுத்த ஒப்புக்கொடுப்பது போல, கிறிஸ்தவன் தன்னுடைய புத்திக் கூர்மையையும், உணர்வுகளையும், ஆசைகளையும் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புவிக்கிறான், பிறகு ஆவியானவர் அவனை தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்க உதவுகிறார்.

***வசனம் 19.*** கிறிஸ்தவனின் நிரப்பப்பட்டிருத்தல் என்பது அற்புத அடையாளங்களைச் செய்வதால் நிரூபிக்கப்படுவதில்லை, மாறாக அவனுடைய தெரிவினால் நிரூபிக்கப்படுகிறது. முதலாவதாக, "ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள்" தொழுகை செய்கிறவர்களாவர். **பாடுதல்** என்பது பரிசுத்தவான்களின் கூடிவருதலைக் குறிக்கிறது, ஏனெனில் பவுல் **ஒருவருக்கொருவர் பேசுதல்** என்று சொன்னார் இது ஒரு தனி ஜெபவேளையல்ல, மாறாக மற்றவர்களோடு சேர்ந்து செயல்படுகிற ஒரு காரியம்.

பாடுதலில் அடங்கியிருப்பவை **சங்கீதங்கள்** (*psalmos*), **கீர்த்தனைகள்** (*humnos*), மற்றும் **ஞானப்பாட்டுக்கள்** (*oide*). இவைகளின் நோக்கம் போதிப்பது, பக்திவிருத்தி உண்டாக்குவது, மற்றும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவது. (காண்க கொலோசெயர் 3:16, அதில் பவுல் "ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லுவது" பற்றி குறிப்பிடுகிறார்.) சங்கீதங்களினால் "பேசுதலும்" மற்றும் "போதித்தலும் புத்தி சொல்லுதலும்" செய்யப்பட வேண்டியது. "சங்கீதங்களினாலும்" என்று பவுல் குறிப்பிட்டது பெரும்பாலும் பழைய ஏற்பாட்டில் பாடும்படி எழுதப்பட்ட சங்கீதங்களைக் குறிப்பதாக இருக்கலாம். அநேக சங்கீதங்கள் இசைக்கேற்ப அமைக்கப்பட்டவை, அவைகள் இன்று சபைகளிலே பயன்படுத்தப்படுகின்றன. "கீர்த்தனைகள்," என்பவை பக்திப் பாடல்கள், அவைகளும் கருவி இசைக்கேற்ப அமைக்கப்பட்டவை, அவைகள் தேவனை நோக்கியோ அல்லது தேவனைக் குறித்தோ எழுதப்பட்டவை. ஞானப்பாட்டுக்கள் என்பவை (*pneumatikos*) மார்க்க ரீதியான காரியங்களைப் பேசுகிறது, உலகப் பிரகாரமான கருத்துக்களைப் பேசுவதில்லை, அவைகளும் போதிக்கவும், உற்சாகப்படுத்தவும், எச்சரிக்கவும், அல்லது கீழ்ப்படியச் செய்யக் கூடியவைகளுமாயிருக்கின்றன, "சங்கீதங்கள்," "கீர்த்தனைகள்," "ஞானப்பாட்டுக்கள்" ஆகியவற்றுக்கு இடையே அதிகப்பட்ச தெளிவான பொருளைக் கொடுப்பதில்லை. பவுல் அவைகளைத் தனித்தனியே குறிப்பிட்டுள்ளபடியால், எளிமையான ஒரு பொருள் கொடுக்கும் பல சொற்களை பவுல் பயன்படுத்தியிருக்கலாம். செப்துவஜிந்த்தில் இந்த மூன்று பதங்களும் சங்கீதங்களுக்கு பெரும்பாலும் பொதுவானவைகளாக பக்திப்பாடல்களுக்கு ஒன்றுக்குப் பதில் ஒன்றாக பயன்படுத்தப்பட்டன.[9] முதலாம் நூற்றாண்டு யூத வரலாற்று ஆசிரியர் ஃபிளேவியஸ் ஜோசிபஸ் "சங்கீதங்களை" "கீர்த்தனைகளோடும்" "ஞானப்பாட்டுக்களோடும்" சேர்த்து ஒன்றிணைத்து தனது எழுத்துக்களில் குறிப்பிட்டார்.[10] இந்தப் பதங்களின் விளக்கங்கள் பல்வேறு வகையில் சொல் லப்பட்டாலும், பவுலின் உபதேசத்தின்படி பாடப்பட்ட வேண்டியவைகளை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர், அவைகள் தேவனுக்குரியவைகளை சம்பந்தப்படுத்தி அவரைத் தொழுதுகொள்ள ஏதுவாக்குபவை.

பாடுவதன் நோக்கம் இரண்டு வகைப்படும். முதலாவதாக, அவை போதிப்பதற்காகவும், புத்தி சொல்வதற்காகவும், *ஒருவருக்கொருவர்* சமக்கோட்டில் பேசும்படியாகவும் நோக்கம் கொண்டவை. இரண்டாவதாக, அது செங்குத்தான கோட்டில் *தேவனுக்கு* துதி செலுத்தும்படியாகவும் நோக்கம் கொண்டவை (காண்க கொலோசெயர் 3:16). பாடுதலின் நோக்கம் "போதிக்கவும்" அல்லது "கற்பிக்கவும் தக்கதாக திட்டமிடப்பட்டது,"[11] மற்றும் "புத்திசொல்லிக் கொள்ளும்படியும்" - அதாவது, "எச்சரிக்கவும் அறிவுறுத்தவும்.

... உற்சாகம் (அளிக்கவும்), (அல்லது) கடிந்து கொள்ளவும்."[12] பாடப்பட்டன.

**கீர்த்தனம் பண்ணி** எனும் வார்த்தை கிரேக்க மொழியில் *psallontes, psallō* என்பதன் ஒரு வடிவம். இதன் சரியான அர்த்தத்தின் மீது மிகப் பெரிய முரண்பாடுகள் எழும்பியுள்ளது. பதினேழு கிரேக்க - ஆங்கில அகராதிகளின் விளக்கங்களை மேற்கோள் காட்டிய பிறகு M. C. Kurfees ஒரு முடிவுரையாக நூற்றாண்டுகளினூடே *psallō* ஐந்து வித்தியாசப்பட்ட வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றார்:

> *(1) முடியைப் பிய்த்துக் கொள்வது; (2) நாண் ஏற்றி தெறிக்கத்தக்கதாகச் செய்வது; (3) தச்சனின் அளவு நூலை இழுத்து விடுதல் (4) இசைக் கருவிகளின் நரம்புகளை மீட்டுதல் அதாவது இசைக் கருவியைப் பயன்படுத்துவது; மற்றும் (5) மனித இருதயத்தை சுண்டி இழுத்து, அதாவது (இருதயத்திலிருந்து) பாடி, துதிக்கீதங்களால் கொண்டாடுவது.*[13]

குர்ஃபீஸ் *psallō* என்ற வகையில் முதல் மூன்று பயன்பாடுகளை தொழுகையுடன் சம்பந்தப்படாதவைகள் என்ற முடிவுக்கு வந்தார். அவர் அதன் பிறகு தொடர்ந்து அகராதிகளில் சொல்லப்பட்டதை சுட்டிக் காட்டி, *புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையின் பொருள் தேவனை பாடல்களால் துதித்தல் என்ற பொருளையுடையது என்றார்*.[14] குர்ஃபிஸ் தன்னுடைய புத்தகத்தில் சபையின் தந்தைகளால் (அப்போஸ்தலர் காலத்தில் முதல் சில நூற்றாண்டுகளில் தலைமைத்துவத்தில் இருந்தவர்களால்) *psallō* என்பதன் பயன்பாட்டை ஆய்வு செய்தார். அவர் தம் ஆய்வில் குறிப்புக்கட்டளை மற்றும் பொதுக் கட்டளைகளின்படி அதன் (*psallō* வின்) பயன்பாட்டையும், புதிய ஏற்பாட்டின் காலத்துப் பயன்பாட்டையும் அவைகளின் வெளிச்சத்தில் ஆராய்ந்தார் அவர் முதல் நூற்றாண்டின் சபையில் பயன்படுத்தப்பட்ட ஒரே இசைக் கருவி குரல் (இசை) மட்டுமே என்ற முடிவுக்கு வந்தார்.

புதிய ஏற்பாட்டில் பாடும்படி கொடுக்கப்பட்ட கட்டளை பழைய ஏற்பாட்டுக் காலத்தில் என்ன நடந்தது என்பதுடன் எவ்விதத் தொடர்புமில்லை, அதே போல பரலோகத்தில் என்ன இடம் பெறப் போகிறது என்பதோடும் சம்பந்தமில்லை, அல்லது ஜனங்களுக்கு என்ன விருப்பம் என்பதோடும் சம்பந்தமில்லை. ஆனால் தேவன் தனது ஜனங்களைச் செய்யச் சொன்னவை மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழ் செய்யப்படும் தொழுகையில், பாடுவதற்கென்று கொடுக்கப்பட்ட கட்டளைகள் எல்லாவற்றோடும் அதற்கு சம்பந்தமுண்டு. ஒரு நபர் கவனமுடன் வாழ்ந்து ஞானமாய் நடப்பவராயின், அவர் தேவன் கேட்பதை அப்படியே செய்வார்.

உங்கள் **இருதயத்தில் கர்த்தரைப்** பாடிக்கீர்த்தனம் பண்ணி என்பது தொழுகையின் மேல் நோக்கு கோட்டில் வலியுறுத்தப்படுகிறது, தொழுகையானது "கர்த்தரிடத்தில்" ஏறெடுக்கிற ஒன்று. எபிரேயர் 13:15ல், கிறிஸ்து மூலமாக நாம், "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை ... எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" என்று எபிரெய எழுத்தாளர் சொன்னார். தொழுகை ஒன்றாகக்கூடிய கிறிஸ்துவின் சரீரத்திற்குப் பயனளிக்கக்கூடியது, ஆனாலும் அது தேவனுக்கு ஒவ்வொரு தனிப்பட்டவர்களாலும் கூட்டமாக செலுத்தப்படுவது. மீட்டப்பட வேண்டிய கருவி இருதயமாக இருக்கிறது. புத்திமதி என்னவெனில்

*“பாடுங்கள்,” இதில் வாயும் உள்ளடக்கம்; ஆனால் psallō என்பதற்கான கருவி இருதயம். முதல் நூற்றாண்டு சபையில் இயந்தரத்தனமான இசைக்கருவி தொழுகையில் பயன்படுத்தினதிற்கான ஆதாரம் வசனங்களிலும் இல்லை, முழுக்க முழுக்க சபையின் வரலாற்றிலும் இல்லை. அதற்கு மாறாக, சாட்சியங்கள் அனைத்தும் சபையின் தொழுகையில் பயன்படுத்தப்பட்ட இசை குரலிசை மட்டுமே என்று ஆலோசனையாகச் சொல்லுகிறது.*

*தொழுகையில் வாத்திய இசைக்கருவியைப் பயன்படுத்துவதில் திருப்தி பட்டுக் கொள்வோர் சொல்லுகிற, “வேதாகமம் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்லுவதில்லையே” எனும் வாக்கியம் முற்றிலும் பெலனற்ற தர்க்கம். என்ன செய்ய வேண்டும் என்று தேவன் சொல்லும் போது, அவர் ஒவ்வொரு மாற்றுவழிகளையும் அவர் சொல்லி, “அதைச் செய்யாதே” என்று சொல்ல வேண்டுவதில்லை. தேவனுடைய வசனம் அவர் என்ன கட்டளையிடுகிறார் என்பதையும் அதை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்பதையும் உள்ளடக்கியவை, அதே போல தவிர்க்கிறவைகளையும் கொண்டுள்ளது, அவர் கட்டளையிட்டவைகளுக்கு அப்பால் எதையுமே தவிர்க்கிறது. தொழுகை செய்வோர் பாடி அவர்களுடைய இருதயங்களில் “கர்த்தரை” கீர்த்தனம்பண்ண வேண்டியவர்கள். அங்கே கிறிஸ்துவும் தேவனுடைய பரிபூரணமும் நிறைவாய் வாசம்பண்ணுகிறது, ஆவியினால் நிரப்பப்பட்ட இருதயமுள்ளவர்கள் சந்தோஷத்தாலும் நிறைந்து கர்த்தருக்கு செலுத்தும் துதிகளிலே நிரம்பி வழிகின்றனர்.*

***வசனம் 20.*** *“ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதற்கான” இரண்டாவதான ஒரு சாட்சியம் நன்றி செலுத்துதல். பவுல் ஏதோ சிலவற்றுக்கு சில நேரங்களில் மட்டும் நன்றி செலுத்தும்படி சொல்லவில்லை, மாறாக* ***எப்பொழுதும் எல்லாவற்றுக்காவும்*** *ஸ்தோத்தரிக்கும்படி சொல்லுகிறார். 1 தெசலோனிக்கேயர் 5:18ல், அவர், “எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்” என்று எழுதினார். கிறிஸ்தவன் எல்லா நன்மையான காரியங்களுக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தமுடியும். “அவன் தீமைகள் நடந்தாலும் நன்றி (ஸ்தோத்திரம்) செலுத்த முடியும், ஏனெனில் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது” என்று அவன் அறிவான் (ரோமர் 8:28).*

*எபேசியர்கள்* ***நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே*** *ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டார்கள், அவர் மூலமே நாம் தேவனை அணுகுகிறோம் என்று அறிவோம் (காண்க யோவான் 14:13; 1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 13:15) மேலும் “ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்” (2:18). நமது ஸ்தோத்திரம்* ***பிதாவாகிய தேவனை*** *நோக்கியதாக இருக்கும்படி வழிகாட்டப்பட்டது, அவரைக் குறித்து யாக்கோபு குறிப்பிடுகையில், “நன்மை யான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது” என்றார் (யாக்கோபு 1:17).*

***வசனம் 21.*** *கிறிஸ்தவர்கள் “ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதன்” மூன்றாவது சாட்சியம் அவர்கள்* ***ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தல்***. *இந்த அறிவுரை பவுலின் நிருபத்தின் ஒரு பகுதியின் நிறைவைப் பெறுகிறது, கூடவே இன்னொரு பகுதியின் துவக்கத்தைக் கொண்டுள்ளது. அப்போஸ்தலன்*

*கீழ்ப்படிதலின் கருத்தைப் பயன்படுத்தி நிருபத்தின் ஒரு நெடிய பகுதியை அறிமுகப்படுத்தி குடும்பம் மற்றும் அடிமைத்தனத்தைக் குறித்து விவாதிக்கிறார், எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் ஐக்கியமாக வாழவேண்டும் என்று பவுல் விரும்பினார். இதைச் செய்வதற்கு அவர்கள் தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து தாழ்மையை வெளிப்படுத்த வேண்டும், பொறுமையைக் காத்துக் கொள்ள வேண்டும், சகிப்புத் தன்மையுடன் ஒருவருக்கொருவர் அன்பினால் தாங்க வேண்டும் (4:2, 3). கூடுதலாக, அவர்கள் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவதை தவிர்க்கும் படியாகவும் அதை தவறாக நடத்தப்பட்ட வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் காத்துக் கொண்டு சபைக்கு இடையூறு வராதபடி தற்காக்க வேண்டும் (4:25-32). அவர்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலே ஒற்றுமையான வாழ்விற்கு வழிவகுக்கும்.*

*"கீழ்ப்படிதல்" (hupotassō) தொகுப்பாக "கீழ்" (hupo) "படிதல்" (tassō).*[15] *Tassō என்பது ஒரு சிறப்பான கிரேக்க வார்த்தை, இராணுவ படைத்தளபதியின் கீழான சிப்பாய்களுக்கு அல்லது கப்பற்படைதலைமை மாலுமிக்கு கீழ்ப்படியும் கப்பல் சிப்பந்திகளை குறிக்கும் சொல்லாக இந்த வசனப்பகுதி பேசுகிறது; ஒரு தனிப்பட்ட நபர் மற்றொரு நபருக்கு கீழ்ப்படிந்திருத்தலை இது உள்ளடக்கிய சொல். இந்த வசனத்தில் வினைச் சொல்லின் பொருள் "ஒருவருக்கு தன்னைக் கீழ்ப்படுத்துதல், கீழ்ப்படியும்படியாக."*[16] *பவுலின் பிற எழுத்துக்களில், கீழ்ப்படிதலைக் குறித்த கருத்து "குறிப்பிட்ட கூட்ட மக்களுக்கான எண்ணமாக பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது (1 கொரிந்தியர் 14:34; கொலோசெயர் 3:18; 1 தீமோத்தேயு 2:11; தீத்து 2:5), குழந்தைகள் (1 தீமோத்தேயு 3:4), அடிமைகள் (தீத்து 2:9) - அல்லது ஆளுகை அமைப்புக்கு விசுவாசிகள் கீழ்ப்படிந்திருத்தலை குறிப்பிடுகிறது (ரோமர் 13:1, 5; தீத்து 3:1)"*[17] *(வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).*

*தெய்வ பயத்தோடே என்பது கிறிஸ்துவைக் கனப்படுத்தி மதிப்பளிப்பவர்கள் மற்றவர்களையும் கனப்படுத்தி மதிப்பு அளிப்பார்கள் என்பதை ஆலோசனையாகச் சொல்லுகிறது. NIV "கிறிஸ்துவுக்கு பயத்துடன் கூடிய கனத்தைச் செலுத்தும்படிக்கு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்," என்று சொல்லுகிறது, KJV "தெய்வபயத்தோடே" என்று பேசுகிறது. தாழ்மையான எண்ணத்தை வெளிப்படுத்தும் பொருட்டு மற்றவர்களுடைய தேவையில் நடத்துவது நமது சுயத்திற்காக கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுவதைக் காட்டிலும் அதிகமானது (காண்க பிலிப்பியர் 2:3-8).*

*5:21ல் பவுல் பொதுவான விதியை கொடுத்தபின், புருஷர்களுக்கும் மனைவிகளுக்கும் குறிப்பு விதியைக் கொடுக்கிறார். அதேபோல பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும், எஜமானருக்கும் வேலைக்காரருக்குமான கைக்கொள்ளும் காரியங்களைக் குறித்து 5:22-6:9 வசனங்களில் குறிப்பிடுகிறார்.*

## புருஷர்கள் மற்றும் மனைவிகள் உறவுமுறையைக் கனப்படுத்துதல் (5:22-33)

*கொலோசெயர் 3 ல் சொன்னது போலவே எபேசியர் 5ல் பவுல் சபைக்குள் இருக்கிற புருஷர்களைக் குறித்தும் மனைவிகளைக் குறித்தும் பேசுகிறார். இந்த போதனையை அவர் மனைவிகளிடம் ஆரம்பித்து*

*மனைவிகளிடமே முடிக்கிறார், ஆகிலும் அவர் பேசினவைகளில் பெரும்பாலானவை புருஷர்களுக்கு பேசப்பட்டவை. இந்த வலியுறுத்தல் 1 பேதுரு 3:1-7ல் தலைகீழ் மாற்றத்துடன் பேசப்பட்டது.*

***மனைவிகளே: "கீழ்ப்படிந்திருங்கள்" (5:22-24)***

***[22]மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்த புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். [23]கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். [24]ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படித்திருக்க வேண்டும்.***

***வசனம் 22. மனைவிகள்*** *(தங்கள்)* ***சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க*** *போதிக்கப்பட்டனர். ஒற்றை வினைச்சொல் hupotassō வசனம் 21ல் பகிர்ந்து பேசப்படுகிறது, இந்த வசனத்தில் கிறிஸ்தவர்களின் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலைச் சொல்லி, வசனம் 22ல் மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிதலைப்பற்றி பேசப்படுகிறது. "கீழ்ப்படிந்திருங்கள்" என்று சொல்லப்படுவது வசனம் 22ல் பெரும்பாலான வேதாகமங்களில் வலதுபுற சாய்வு எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, அதன் குறிப்பு இந்த வினைச் சொல் மூலபிரதியில் இல்லை ஆனால் அந்த கருத்தைக் குறிப்பிட்டு காட்டும்படிக்கு மொழிபெயர்ப்பாளர்களால் நுழைக்கப்பட்டது என்பதே. நேரடிப் பொருளில், பவுல் சொன்னார், "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் ... மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்கும்." பின்பு, வசனம் 24ல், மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதை பவுல் தெளிவாகக் குறிப்பிட்டார்.*

*மனைவிகளுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருத்தலையும் உட்படுத்தியது (காண்க 1 பேதுரு 3:1, 6). அதேபோல அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் (எபேசியர் 5:33). மனைவி தன் புருஷனுக்கு கீழ்ப்படிந்திருப்பதற்கான முன்மாதிரி கிறிஸ்துவுக்கு சபையின் முன்மாதிரியைப் போன்றது (5:24). முதல் நூற்றாண்டு எபேசியர்களின் கலாச்சாரத்தில் பவுலின் உபதேசம் புரிந்து கொள்ளப்பட்டதிலிருந்து அவருடைய முடிவுரை பலப்பட்டிருக்க வேண்டும். பொதுவாகக் கூறும் போது, புருஷர்களும் மனைவிகளும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்; ஆனால் குறிப்பான பொருளில், மனைவிகள் தங்கள் புருஷர்களுக்குக் "கீழ்ப்படிந்திருக்க" வேண்டும்.*

***கர்த்தருக்கு*** *கீழ்ப்படிகிறது போல என்பது "இயேசுவுக்கு கீழ்ப்படிகிற இதே போல, இதே விதத்தில்"[18] (hōs) மனைவிகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியவர்கள். தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிவதினால், மனைவிகள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலுள்ளவர்களாவார்கள். இதே கருத்து கொலோசெயர் 3:18ல் முன் வைக்கப்படுகிறது, அங்கே பவுல், "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று எழுதினார்.*

மனைவிகள் புருஷர்களுக்கு கீழ்ப்படிதல் என்பது (புருஷர்கள் மனைவியை விட மதிப்புடையவர்கள் என்ற) தகுதி அடிப்படையில் அல்ல அல்லது தேவனுடைய பார்வையில் ஒருவருக்கொருவர் சமமாக ஈடுகொடுத்தலிலும் சம்பந்தப்பட்டதல்ல (புருஷர்களும் ஸ்திரீகளும் தேவனுக்கு முன்பாக சம ஸ்தானத்தையுடைவர்கள்; கலாத்தியர் 3:28). மாறாக, கீழ்ப்படிதல் என்பது தேவன் கொடுத்த வேறுபட்ட கடமைகள் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் எல்லா வகையிலும் ஏற்புடையதாக கீழ்ப்படிந்திருக்க வேண்டும். மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

**வசனம் 23.** அடுத்ததாக, மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டிய காரணத்தை பவுல் விளக்கப்படுத்துகிறார், (இருக்கிற) "படியால்" என்பது "இணைக்கும் சொல்" *hoti* லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. அது ஆங்கில வார்த்தையான "because." "ஆகையால்" என்பதுடன் தொடர்புடையது.[19] "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, **புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்." இங்கே அவர் புருஷர்களுக்கும் மனைவிகளுக்கும். கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள இருபொருள் ஒற்றுமையில் எழுதுகிறார்.** சபை கிறிஸ்துவின் மணவாட்டி. குடும்பத்தில் புருஷனுக்குரிய கடமை சபையில் கிறிஸ்துவுக்குரிய கடமை யைப் போன்றது. இந்தக் கடமை "தலை" என்பதாக விவரிக்கப்பட்டுள்ளது, *kephalē,* என்பதன் மொழிபெயர்ப்பு, இதன் பொருள் "தலைவர் அல்லது ஆளுபவர்."[20] இதற்கு முன்பு பவுல் இந்த வார்த்தையை கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் என்று சொல்லப் பயன்படுத்தி, "சபையாகிய சரீரத்திற்குத் தலையாயிருக்கிறார்" என்றார் (1:23). கிறிஸ்துவின் அதிகாரத்தை மனதில் கொண்டு, அவர் அவரை தலைவராகவும் ஆளுபவராகவும் பேசியிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை (காண்க மத்தேயு 28:18). அதேபோல, புருஷர்கள் அதிகாரமிக்கவர்களாக தலைமையுடன் ஆளுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். தேவனுடைய குடும்பத்திற்கான முன்மாதிரி அமைப்பு அவருடைய சபைக்கும் முன்மாதிரித் திட்டத்தைக் கொண்டது. இந்த அதிகாரத்தை மனதில் வைத்துக் கொண்டு அடக்குமுறையைக் கையாளக்கூடிய நோக்கத்தில் பார்க்கக் கூடாது, மாறாக வழிநடத்தக் கூடியவர்களாயிருக்க வேண்டும். இந்த உண்மை புருஷர்களுக்கு பவுல் கொடுக்கும் உபதேசங்கள் கொண்ட பின்வரும் வசனங்களில் காணப்படுகின்றன.

**அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்** என்பது, கிறிஸ்துவைக் குறிக்கிறது. புருஷர்கள் தங்களுடைய மனைவிகளுக்கு இரட்சகர்கள் என்ற அர்த்தத்தில் பவுல் சொல்லவில்லை, கிறிஸ்துவினிடத்தில் அவர்களை வழி நடத்துகிறவர்கள் என்று மட்டும் குறிப்பிட்டார். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் என்பதற்கான விளக்கத்தைக் கொடுப்பதற்காக, அவர் இந்த வார்த்தைகளை சேர்த்துப் பேசினார்.

எபேசியர்கள் ஒரு காலத்தில் இரட்சிக்கப்படாத நிலையில் வாழ்ந்தார்கள் (2:1-3). தங்களுடைய பாவத்தினால் அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தின் மூலம் கிருபையாக தேவன் அவர்களை இரட்சிப்பிற்கான கிரியை செய்தார் (2:4-22). கிறிஸ்துவுக்குள் அவர்கள் "ஒரே சரீரத்திற்குள்" தேவனிடத்தில் ஒப்புரவாக்கப்பட்டனர் (2:16), அது அவருடைய சபை (1:22, 23). ஆகையால்,

அவர்கள் ஒப்புரவாக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாயினர். இந்த அர்த்தத்தில் தான் கிறிஸ்து "சரீரத்திற்கு இரட்சகர்" என்று பவுல் பேசினார். எஸ்டின் என்ற வினைச் சொல், "இருத்தல்," என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அது தற்காலத்தில் ஏதோ ஒன்று நிகழ்ந்து கொண்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டும் சொல். இது சபை நித்தியத்துக்கும் கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டிருக்கும் என்பதோடும், இப்பொழுது இரட்சிக்கப்பட்டிருப்பவர்களைக் கொண்டு அமைவு பெற்றுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது.

***வசனம் 24.*** பவுல் மறுபடியும் தனது இருபொருள் கொண்ட ஒப்புமைக்குத் திரும்புகிறார். விளக்கவுரையாளர்களில் ஒருவர் பின்வருமாறு எழுதினார்,

> *ஒருவர் சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருப்பது பற்றி என்ன சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது பற்றி எழுத்தாளர் என்ன நினைக்கிறார் என்று கேட்டால் அவர் நிருபத்தின் எஞ்சிய பகுதியில் சபையின் உறவுமுறை கிறிஸ்துவுடன் கொண்டிருக்கிறவகையைப் பற்றி விளக்கமளித்திருப்பதில் ஒரு பதிலைத் தேடமுடியும். சபைக்கு கிறிஸ்துவை அதன் எல்லாவற்றிற்கும் மேலான தலையாகக்கொடுக்கப்பட்டிருப்பதே தேவனுடைய ஈவு (1:22). 2:20, 21ல் சொல்லப்பட்ட உருவகமொழியில் சபை கிறிஸ்துவை தனது அமைப்பிற்கான (மூலைக்) கல்லாகக் காணுகிறது மேலும் அவரே எல்லாவற்றையும் இசைவான இணைப்பாக பிடித்துக்கொண்டுள்ளார். அது தொடர்ச்சியாக அவருடைய பிரசன்னத்திற்குத் திறந்திருக்கிறது (3:17) மேலும் அவருடைய சூழ்ந்து கொள்ளும் அன்பை அறிந்து கொள்ளுகிறது (3:19). சபை அவருடைய ஈவாகிய கிருபையைப் பெற்றுக் கொள்கிறது (4:7) மற்றும் அது கட்டப்பட ஏதுவான ஊழியர்களையும் ஈவாக பெற்றுக் கொள்கிறது (4:11, 12). அது தனது தலையைப்பார்த்து வளர்கிறது மேலும் அப்படிப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்கிறது (4:15, 16), அவற்றில் அவரைக் குறித்த போதனைகளையும் (4:20, 21) பெற்றுக்கொள்கிறது. சபை கிறிஸ்துவின் அன்பைப் பின்பற்றுகிறது (5:2) மேலும் அவரைப் பிரியப்படுத்துவது இன்னது என்பதை அறிய முயற்சிக்கிறது (5:10) மேலும் அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்ள முற்படுகிறது (5:17). அது அவருக்கு துதிப்பாடல்களைப் பாடுகிறது (5:19) அவருக்குப்பயப்படுகிற பயத்துடன் வாழுகிறது (5:21). எனவே, சபை தன் இரண்டாம் நிலையில், தனது தலையை நோக்கிப்பார்த்து அவருடைய பயனளிக்கும் சட்டங்களை எதிர்பார்த்து, அவருடைய சட்டவிதிமுறைகளின்படி வாழ்ந்து, அவருடைய பிரசன்னத்தையும் அன்பையும் அனுபவித்து, வளருவதற்கேதுவான வரங்களை அவரிடத்தில் பெறும்போது, அவருக்கு நன்றிகளையும் பயத்தையும் கொண்டவர்களால் அவருக்கு பதில்கிரியை செய்கிறது. இப்படிப்பட்ட எண்ணமே ஒரு மனைவி தனது புருஷனிடத்துள்ள உறவுமுறையை விருத்தி செய்து கொள்ளும்படி ஊக்கமளிக்கப்படுகிறாள்.*[21]

*மனைவிகள் எந்தக் காரியத்திலேயும் தங்கள்* ***புருஷர்களுக்குக்***

***கீழ்ப்படிந்திருக்க வேண்டும்,*** என்று பவுல் சொன்னார், அது ***சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல கீழ்ப்படிய வேண்டும்.*** அவர் எவ்வித விதி விலக்கோ அல்லது இடமோ மனைவியின் கீழ்ப்படிதலுக்கு எவ்வித வரையறையுமோ வைக்க வில்லை, புருஷர்கள் ஒருவேளை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் முரணாய் எதையாகிலும் தன் மனைவியினிடத்தில் கேட்டால் மட்டுமே வரையறையுண்டு. மாறாக, அவர் உண்மையாய் ஏற்றுக் கொள்ளும் புருஷர்கள், கிறிஸ்துவுக்கு மாதிரியாகத் தங்கள் குணாதிசயங்களை அமைத்துக்கொண்டு, கிறிஸ்துவுக்குப் பிரியமானவைகளை மட்டும் தங்கள் மனைவிகளிடத்தில் கேட்பார்கள், அது பிரயோஜனமுடையவைகளாயிருக்கும். மனிதக் குறைபாடுகளினால் உடைந்து போகும் உறவுமுறைகளால், இந்த அருமையை ஒருபோதும் அடைய முடியாது. ஆகிலும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மனைவிகளுக்கும் புருஷர்களுக்கும் உரியது அவர்கள் ஒருவருக்கொருவர் பொறுப்பேற்று அன்பினாலேயும் சுயநலமற்ற முறையிலும் அடைய வேண்டும். பின்வரும் வசனங்கள் இந்த இலக்கை அடைய உதவுகின்றன.

*புருஷர்களே: "அன்புகூருங்கள்" (5:25-33)*

***[25]புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையிலே அன்புகூர்ந்து. [26]தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், [27]கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். [28]அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். [29]தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். [30]நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். [31]இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். [32]இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். [33]எப்படியும் உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.***

***வசனம் 25.*** தன் கவனத்தை மனைவிகளிடமிருந்து புருஷர்களிடம் திருப்பி பவுல் ***"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்,"*** என்று எழுதினார். மனைவிகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டளைக்கு ஈடாக புருஷர்கள் தங்கள் மனைவிகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை வசனம் 25 லிருந்து 32 வரைக்கும் பேசுகிறது. இப்பிரிவு

*இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருக்கிறது. முதல் பகுதியில் புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரும்படி சொல்லப்பட்டது. இதை எப்படி செய்ய வேண்டும் என்பதை பவுல் கிறிஸ்து சபையில் அன்புகூருவதை ஒப்பிட்டுக் காட்டுகிறார் (5:25-27). இரண்டாம் பாகம் புருஷர்கள் தங்கள் மனைவிகள் மீது காட்டும் அன்பைக் குறித்துப் பேசப்படுகிறது. இங்கே, பவுல் கிறிஸ்து சபையைப் பராமரிப்பது போல, புருஷர்கள் தங்களைத் தாங்களே நடத்திக் கொள்வது போல தங்கள் மனைவிகளை நடத்த வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் (5:28-32).*

*இந்த நிருபத்தில் அன்பு என்பது ஒரு புதிய கருத்தல்ல. பவுல் இதற்கு முன்பு தேவனுடைய அன்பைக் குறித்துப் பேசினார் (2:4). அதே போல கிறிஸ்துவின் அன்பைக் குறித்தும் பேசினார் (3:19; 5:22). பின்னர், மீண்டும் எபேசியர்களின் அன்பையும் அதே போல தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பையும் குறித்து மீண்டும் பேசினார் (6:23, 24). இப்பொழுது ஆராய்ந்து கொண்டுள்ள வசனப்பகுதியில் பவுல் புருஷர்கள் மனைவிகளிடத்தில் காட்டுகிற அன்பு கிறிஸ்து சபையினிடத்தில் காட்டுகிற அன்பை ஒப்பிட்டுக் குறிப்பிடுகிறது.*

*“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்” எனும் முக்கியமான கருத்து தவறாக காதல் சம்பந்தப்பட்ட அன்பு அல்லது உணர்ச்சி வசப்படும் அன்பு என புரிந்து கொள்ளப்படக் கூடும். ஆகிலும், பவுல் இந்தப் பகுதி முழுவதும் தன் மனதில் கொண்டிருந்த வகை (agapaō, “அன்பு, நல்லெண்ணம்”) அன்பை விளக்கப்படுத்தினார் (காண்க 5:1, 2). புருஷர்கள் தங்களுடைய மனைவிகளிடத்தில் கொண்டிருக்க வேண்டிய அன்பு, அவர்களுக்கு நலமானதை நாடுவதன் விளைவாயிருக்கிறது. அது புண்படுத்த அல்ல, உதவி செய்ய, இடிப்பதற்கல்ல கட்டுவதற்காக, உற்சாகத்தைக் குறைக்க அல்ல ஊக்கமளிக்க ஒரு தீர்மானமாக இருக்கிறது.*

*புருஷர்கள் தங்கள் மனைவிகளிடத்தில் காட்ட வேண்டிய அன்பு கிறிஸ்து சபைக்குக் காட்டக் கூடிய அன்பின் மாதிரியைக் கொண்டிருக்க வேண்டும்:* **கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். புருஷனின் அன்பு அது ஒரு தீர்மானமாக இருப்பது மட்டுமின்றி தன்னையே தியாகம் பண்ணுவதாகவும் இருக்க வேண்டும்.** *உலகத்தின் பாவத்திற்காக கிறிஸ்து தம்மை சிலுவையிலே ஒப்புக்கொடுத்தபோது, தமது சுய இரத்தத்தினாலே அவர் சபையை கிரயத்துக்கு வாங்கினார் (நடபடிகள் 20:28 - ஐக் காண்க). அவர் பலியாகி மரித்த காட்சிதான் உலகம் இதுவரை கண்டிராத மாபெரும் கீழ்ப்படிதலின் செய்கையாக இருக்கிறது. சபையை ஸ்தாபிதம் பண்ணவும், அதன் வளர்ச்சிக்காக போஷிக்கவும், கடைசியில் அதை பரலோகத்தில் சேர்க்கவும், இயேசு “தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.” இந்த ஒருமைப் பொருள் ஒப்புமை சபை கிறிஸ்துவின் மணவாட்டியாகவும், தமது மணவாட்டியின் நலனுக்காக கிறிஸ்து தியாகம் பண்ணாதது எதுவுமில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது. அதேபோல, புருஷர்கள் தங்களைத் தாங்களே தங்கள் மனைவிகளுக்காக ஒப்புக்கொடுக்க வேண்டியவர்கள். புருஷர்களுக்கும் மனைவிகளுக்குமிடையான பரஸ்பர மதிப்பு தேவன் குடும்பத்திற்கு கொண்டுள்ள திட்டத்தை நிறைவேற்றத் தக்க ஒற்றுமையான உறவுமுறையை கட்டியெழுப்ப உதவுகிறது. விவாகத்தைக் குறித்த பவுலின்*

கனவு, மனைவிகள் "முழுமையான கீழ்ப்படிதலுக்கு முழுமையான அன்பை"[22] தங்களுடைய புருஷர்களிடத்திலிருந்து பெற்றுக் கொள்வது. Kenneth S. Wuest வசனம் 25 க்கு குறிப்பிடத்தக்க ஒரு குறிப்பை சேர்த்தார்:

> புருஷன் மூன்று வேறுபட்ட வகையிலான அன்பைத் தன் மனைவியினிடத்தில் கொண்டிருக்கிறான், உணர்ச்சி வசப்படும் அன்பு (*eros*), திருப்தியையும் மனநிறைவையும் தருகிற அன்பு (*stergo*), பாசமிகுந்த அல்லது நேசமிகுந்த அன்பு (*phileo*). இவையனைத்தையும் *agapao* அன்புடன் முற்றிலும் உள்ளடங்கிய ஆவியினால் நிரப்பப்பட்ட புருஷனின் குணாதிசயம் பரிசுத்தமும் பரலோகமாக்கப்பட்டதுமாகும்.[23]

***வசனம் 26.*** வசனங்கள் 26, 27ல், பவுல் அடுத்ததாக கிறிஸ்து சபைக்காக தம்மையே பலியாக்கின அன்புக்கான மூன்று காரணங்களை விளக்கமளித்தார். ஒவ்வொரு காரணமும் "அதினால்," என்று பொருள் கொடுக்கும் *hina,* என்பதில் தொடங்குகிறது.

முதலாவதாக, கிறிஸ்து தம்மைத் தாமே சபைக்காக ஒப்புக் கொடுத்தார் **அதினால் தாம் அதைத் திரு வசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினாலே சுத்திகரித்து, பரிசுத்தமாக்கினார்.** "பரிசுத்தமாக்குதல்" (ஒரு வினைச் சொல்லாக [*hagios,*"பரிசுத்தம்"]) அதன் பொருள் "பரிசுத்தமான பயன்பாட்டிற்காக பிரித்து வைத்தல்."[24] இந்த வார்த்தை முரண்பாடாக மற்றொரு கிரேக்க வார்த்தையான, *koinos,* இந்த வசனப் பகுதியில் பயன்படுத்தாவிட்டாலும் அதன் பொருள், "தீட்டுப்பட்ட, அசுத்தமான, மாசுபடிந்த" என்பன.[25] பரிசுத்தமாக்கப்பட ஒருவர், அசுத்தமானவைகளிலிருந்து - அது உலகம் - தன்னை தனிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, தேவனுடைய பரிசுத்த நோக்கத்திற்காக பிரித்து வைக்கப்பட்ட வேண்டும். சபை என்பது கிறிஸ்துவின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ள ஜனங்களின் ஆத்துமாக்களே (1 பேதுரு 1:22), மற்றும் அவர்கள் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு (அவர்கள்) வரவழைத்தார் … (அவர்கள்) அவருக்குச் சொந்தமான ஜனம்" (1 பேதுரு 2:9). சபை உலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களின் கூட்டமும் தேவனுடைய பரிசுத்த நோக்கத்திற்கென பிரித்தெடுத்த கூட்டமுமாகும். தேவனுடைய ஜனங்களின் பரிசுத்தம் அடிக்கடி இந்த நிருபத்தில் வலியுறுத்தப்படுகிறது. பவுல் கிறிஸ்தவர்களை "பரிசுத்தவான்கள்" "சுத்தமுள்ளவர்கள்" என்று பேசினார் (காண்க 1:1, 4, 15, 18; 2:19; 3:18; 4:12; 5:3). "பரிசுத்தவான்கள்" என்பது *hagios.* எனும் கிரேக்கப் பதத்தின் மொழிபெயர்ப்பு. (காண்க "மேலும் கற்க: சபை சுத்திகரிப்பு [5:26]" பற்றி) இப்புத்தகத்தின் பின்பகுதியில் பார்க்கவும்.

"திருவசனத்தைக் கொண்டு" என்பது *en rhēmati,* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, நேரடிப் பொருளில், "திருவசனத்தால்" என்பது ("திருவசனத்தை மட்டும் கொண்டு" என்று பொருள்படும் ''The'' எனும் வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் சேர்க்கப்பட்டது.) சபையின் சுத்தகரிப்பு என்பது ஞானஸ்நான தண்ணீரால் "வசனத்தைக் கொண்டு" நடைபெறுகிறது. "வசனம்" என்பது சுவிசேஷ வசனத்தைக் குறிப்பதாயிருக்கலாம், அது பிரசங்கிக்கப்பட்டு ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்று சுத்திகரிக்கப்பட சுட்டிக்காட்டப்பட்டது. இது ஒரு வேளை ஞானஸ்நானத்தின் போது

பேசப்பட்ட வார்த்தைகளை, நினைவுக்குக் கொண்டுவருகிறது. உதாரணமாக, "கிறிஸ்துவின் அதிகாரத்தின் பேரில் பாவமன்னிப்பிற்கென்று நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறத்தக்கதாக உங்களை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானப்படுத்துகிறேன்," என்ற வாக்கியத்தை நினைப்பூட்டுதலாகச் சொல்லப்பட்டிருக்கலாம் (காண்க மத்தேயு 28:18, 19; நடபடிகள் 2:38). மேலும் அது ஞானஸ்நானத்தோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளான இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை குறிப்பிடுவதாகவும் இருக்கலாம் (மாற்கு 16:16). 6:17ல், "வசனம்" (வார்த்தை) என்பது பிரசங்கிக்கப்பட வேண்டிய "தேவனுடைய வசனத்தையும்" "ஆவியின் பட்டயத்தையும்" ஒரு வேளை குறிப்பிடுவதாக இருக்கலாம் (காண்க ரோமர் 10:8, 17; எபிரெயர் 6:5; 1 பேதுரு 1:25). சுத்திகரிக்கவும் பரிசுத்தப்படுத்தவும் போதிய வல்லமை அவருடைய வசனத்தில் இருக்கிறது (காண்க யோவான் 15:3; 17:17), எனவே சபையின் பரிசுத்தமாக்கப்படுதல் வசனத்தோடு தண்ணீர் முழுக்கை கொடுத்த போது கிறிஸ்து அதை சுத்திகரித்த நேரத்தில் நிகழ்ந்திருக்கும். தண்ணீர் முழுக்கும் வசனமும் இதிலே உட்படுத்தப்பட்டது.

**வசனம் 27.** *Hina* என்ற வார்த்தையின் இரண்டாவது பயன்பாடு மற்றும் இரண்டாவது நோக்கம் கிறிஸ்து தம்மை சபைக்கு ஒப்புக்கொடுத்த காரியம் வசனம் 27 ல் காணப்படுகிறது: **கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.** சபை தமக்கு முன்பாக பரிசுத்தமான மணவாட்டியாய் இருக்கும்படி கிறிஸ்து தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். 2 கொரிந்தியர் 11:2ல், பவுல் மணவாட்டியின் தகப்பனாக தன்னைக் குறித்து பேசினார் அல்லது மணவாளனின் தோழனாக கொரிந்து சபையை கிறிஸ்துவுக்கு பரிசுத்தமான (கற்புள்ள) கன்னிகையாக ஒப்புக்கொடுத்தலைக் குறித்துப் பேசினார். ஆயினும், எபேசியர் வசனப் பகுதியில், கிறிஸ்து சபையை தமக்கு முன் "மகிமையுள்ள மணவாட்டியாக" நிறுத்திக் கொள்ள தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. "மகிமை" என்பது *endoxos* என்பதன் மொழிபெயர்ப்பு, இந்தப் பதம் இந்த நிருபத்தின் பிற இடங்களில் சபைக்குப் பயன்படுத்தின ஒரு குறிப்பு, இது "மிகச் சிறப்பான" எனும் கருத்தைக் கொண்டு வருவது.[26] சபைக்கு ஒரு மகிமையுள்ள சுதந்தரம் இருக்கிறது (1:18) மேலும் சபை தேவனுக்கு மகிமையைச் சேர்க்கிறது (3:21). வசனம் 27ல், "மகிமை" என்பது சபைக்கு கிறிஸ்துவின் தூய்மையான மணவாட்டி, அவள் "ஒழுக்கம் எனும் பரிபூரணப்பட்ட" வஸ்திரத்தை ஆடையாகத் தரித்துக் கொண்டிருக்கிறாள் என்ற விளக்கமும் சேர்க்கப்பட்டது.[27]

"கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல்," என்பது இதற்கு முந்தின சொற்றொடரில் "மகிமைக்கு" முரணாகப் பயன்படுத்தப்பட்டது, அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி ஒழுங்கீன குற்றமற்றவளாக, கறைபடாதவளாக, அல்லது பழுதற்றவளாக இருக்கிறாள் என்பதை வலியுறுத்துகிறது. பழங்காலத்திருமணச்சடங்குகளின்படி, மணவாளன் மணவாட்டியின் வீட்டிற்கு வருகை தருவான், வரதட்சணையைக் கொடுத்து விட்டு, தன் வீட்டிற்குத் திரும்புவான், அப்பொழுது அவனுடைய எண்ணத்தில் தனது

தூய்மையான மணவாட்டியை மீண்டும் வந்து மணமுடிக்க வேண்டும் என்பதாக இருக்கும். அதே போல, கிறிஸ்து வந்தார் "தம்மைத்தாமே" வரதட்சணையாக அதற்காக "ஒப்புக்கொடுத்து," (5:25) பரலோகத்துக்குத் திரும்பிப் போனார், அவர் தமது பரிசுத்தமுள்ள மணவாட்டிக்காக மறுபடியும் வருகிறார். காலங்களின் முடிவிலே சபையை தமக்கு முன் நிறுத்திக் கொள்ளுகிற நிகழ்ச்சி நடைபெறும். இது பவுல் 2 கொரிந்தியர் 11:2ல் சொன்ன வார்த்தைகளுடன் ஒத்துப் போகிறது, மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 19ல் ஒரு உருவகமாக பேசப்படும் கலியாண விருந்துடன் ஒத்துப்போகிறது.

**அவள் பரிசுத்தமும் பிழையற்றதுமான சபையாக இருப்பாள்.** *Hina* என்ற வார்த்தையின் மூன்றாவது பயன்பாடு இது, மூன்றாவது காரணமும் கூட, கிறிஸ்து "தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார்." "பரிசுத்தமும் பிழையற்றதுமான" எனும் பதம் ஏற்கனவே பவுலால் பயன்படுத்தப்பட்டது (1:4), அது எபேசியர்களை "உலகத் தோற்றத்துக்கு முன்" தெரிந்து கொண்ட நோக்கம் என்பதைக் காட்டும்படியாக பயன்படுத்தப்பட்டது. "தமக்கு முன்பாக அவர்கள் பரிசுத்தமும் பிழையற்றவர்களுமாய்" இருக்கும்படி அவர் விரும்பினார். பரிசுத்தமின்மையும் குற்றமும் உள்ளவர்களாய் இருக்கிற தன்மை தேவனை அறியாதவர்களிடத்தில் இருப்பது, ஆனால் பரிசுத்தமும் குற்றமில்லாமையும் சபையில் இருப்போரின் குணாதி சயம். சபை இப்போது "பரிசுத்தமும் பிழையற்றதுமாகும்," ஏனெனில் பரிசுத்தமாகுதல் என்பது கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி "தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்ததினால் சாத்தியமாயிற்று". சபை தொடர்ந்து ஒளியிலே நடப்பதன் மூலமும் அதே இரத்தத்தால் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுவதன் மூலம் "பரிசுத்தமும் பிழையற்றதுமாய்" தொடர்ந்து இருக்கிறது (1 யோவான் 1:7). கிறிஸ்து மறுபடியும் வரும்பொழுது தமக்கு முன்பு பரிசுத்தமுள்ள மணவாட்டியை நிறுத்திக் கொள்வார். சபை இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்டது, எனவே அது "பரிசுத்தமும் பிழையற்றதுமாகக்" காணப்படக்கூடும். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாக - அவருடைய சரீரமாகவும் அவருடைய மணவாட்டியுமாக இருக்கிறபடியால் - பவுல் தனது நிருபத்தில் கொடுத்துள்ள புத்திமதிகளின்படி நாம் வாழ வேண்டியவர்கள்.

**வசனம் 28.** மனைவிகளுக்கு ஆற்ற வேண்டிய புருஷர்களின் கடமைகளை அறிமுகப்படுத்திய பவுல், சபைக்கு கிறிஸ்துவின் அன்பை ஒரு உதாரணமாக்கி புருஷர்கள் எப்படி தங்களுடைய மனைவிகள் மீது அக்கறை கொள்ள வேண்டும் என்று காட்டினார். அவர், **அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூர வேண்டும்** என்றார். "அப்படியே" என்பது *houtōs* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அது தொடர்ந்து வருகிற உண்மை யோடு தொடர்புடையதாய் "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தது போல" "புருஷர்களும் தங்கள் மனைவிகளில் அன்பு செலுத்த வேண்டும்" (5:25) என்றார். "வேண்டும்" என்பது *opheilō* என்பதன் மொழிபெயர்ப்பு, இந்த வார்த்தையின் மொழிபெயர்ப்பு "ஒழுக்க ரீதி யாகவோ தனிப்பட்ட கடமை ரீதியாகவோ செலுத்தப்படவேண்டிய கடமை" எனும் பொருளைக் கொடுக்கிறது[28] (காண்க யோவான் 13:14). "தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து" (5:28) என்பது புருஷன் "தன்னில்தான் அன்புகூருவது

போல தன் சொந்த மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும்" (5:33). S. D. F. Salmond தமது விளக்கவுரையில்,

> இதன் பொருள் "அவர்களைப் போல" என்று குறைத்துக் கொள்வதல்ல ... ; அல்லது ஒரு எளிமையான "போல" [*hōs*, "போல"] எனும் பொருளில் பேசவில்லை, போல என்று பேசுவதன் பொருள் புருஷன் தன் மனைவியினிடத்தில் காட்டுகிற அன்பு அவன் தன் சொந்த சரீரத்துக்கு காட்டுவதைப் *போல* இருக்க வேண்டும். *Hōs*, என்பது, குணாதிசய பலத்தைக் கொண்டது, "அது இருந்தது போல," "இருக்கிறது போல" என பொருள்படும். *கிறிஸ்துவும் புருஷனும்* முறையே *தலைகளாக* இருக்கின்றனர், பவுல் ஏற்கனவே சொன்னபடி, சபையானது முந்தினவருக்கு (கிறிஸ்துவுக்கு) சரீரமாக தொடர்புடையது, அதே போலதான் மனைவி இரண்டாமவருக்கு (புருஷனுக்கு) உறவுமுறை கொண்டவள். சபை கிறிஸ்துவின் சரீர அமைப்பை பெற்றிருப்பது போல, புருஷனை, தலையாகக் கொண்டு, அவன் தன் மனைவியிடத்தில் அன்பு கூரவேண்டும். புருஷனும் மனைவியும் *ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்* எனும் கருத்தும் அநேகமாக அதே காட்சியை விவரிக்கிறது.[29]

**வசனங்கள் 28, 29.** மனுஷர்கள் தங்கள் சரீரங்களை வெறுப்பதில்லை என்பது, ஒரு பொதுவான விதியாக, இயற்கையான ஒரு செயல், ஆகையால், சுபாவமே புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூர வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லும், ஏனெனில் அவர்கள் தங்களுடைய புருஷர்களின் வாழ்க்கையில் ஒரு இன்றியமையாத அங்கமாகிறார்கள். சபையாகிய சரீரத்துக்கு கிறிஸ்து தலையாக இருப்பதுபோல, புருஷர்கள் தங்கள் மனைவிகளுக்குத் தலையாயிருக்கிறார்கள். இந்த ஒப்புவமையைக் கவனித்துப்பார்த்து, பவுல் புருஷர்கள் தங்கள் தலைமைத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்தினார். எனவே, புருஷர்கள், தங்கள் மனைவிகளில் அன்புகூருவதால், தங்களில் தாங்களே அன்புகூருகிறார்கள். புருஷன் தன் மாம்சத்தைப் **போஷித்துக் காப்பாற்றுகிறது போல, கர்த்தரும் சபையை போஷித்து காப்பாற்றுகிறது போல** அவன் தன் மனைவியையும் "போஷித்துக் காப்பாற்ற" வேண்டும்.

"போஷித்து" என்பது *ektrephō*, என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பு, இது ஒரு தொகுப்பு வார்த்தை (*ek*, "லிருந்து") என்பதையும், (*trephō* போஷிப்பதன் மூலம் கடினமாக்குதல் அல்லது கொழுத்ததாக்குதல்; இப்படியாக, போஷித்தல், உணவளித்தல், பராமரித்தல் என்றெல்லாம் பொருள்படும்).[30] இதே அடிப்படை வார்த்தை 6:4ல் "வளர்ப்பீர்களாக," என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அது பிள்ளைகளை பயிற்றுவிக்கிறதுடன் சம்பந்தப்பட்டது. கிறிஸ்து ஞானஸ்நானம் மற்றும் திருவசனத்தின் மூலம் சபையை பரிசுத்தமாக்குதலுக்கும் சுத்தி கரித்தலுக்கும் வழங்கியிருப்பது போல (காண்க 5:26), மேலும் சபையை வளர்ச்சிக்குக் கொண்டு வருவதற்கு வழங்கியிருப்பதுபோல (4:11-16), புருஷர்களும் தங்களுடைய மனைவிகளின் வளர்ச்சியில் உதவ வேண்டும்.

"காப்பாற்றுவது" (*thalpō*) என்பது சூடு பிடித்தல் அல்லது அனல் உண்டாக்குதல் என்பதுடன் சம்பந்தப்பட்டது.[31] இதே வார்த்தை

*1 தெசலோனிக்கேயர் 2:7ல் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல என்று சொல்லி பயன்படுத்தப்பட்டுள்ளது. "காப்பாற்றுதல்" என்பது கிறிஸ்துவின் சாந்தகுணம் சபைக்காக கவனம் செலுத்துவது போல புருஷர்கள் சாந்தமாகவும் அன்புடனும் தங்கள் மனைவிகளின் முன்னேற்றத்திலே வளரும்படிக்கு உதவிட வேண்டும்.*

***வசனம் 30. நாம் அவரது சரீரத்தின் அவயவங்கள் என்பது*** *தங்களை அவருடைய சரீரமாக பாவித்து கவனம் செலுத்தி தேவையானவற்றை கொடுக்கிற இயேசு கிறிஸ்துவாகிய தங்கள் தலையுடன் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள அன்பின் உறவுமுறையை இது குறிப்பிடுகிறது. கூடுதலாக, கிறிஸ்து சபையை போஷித்துக் காப்பாற்றுகிற தன் மணவாட்டிக்கு வேண்டிய யாவற்றையும் கொடுக்கிற ஒரு கவனமிக்க புருஷராயிருக்கிறார். ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்துவின் சரீரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாயிருக்கிறார்கள், அது நமது கர்த்தர் தாமே தமது சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்டது (நடபடிகள் 20:28). சரீரமானது அவரில் ஒரு பகுதியாகவும் கிறிஸ்துவுக்கு விலை மதிப்புள்ளதுமாயிருக்கிறது. அத்துடன் அவர் கொண்டுள்ள இசைவு பிரிக்கமுடியாதது மற்றும் அதனால் அதின் தேவைகளை அவர் நிறைவேற்றுகிறார். அதேபோல்தான், புருஷர்கள் தங்கள் மனைவிகளை மதிக்க வேண்டும், அவர்களைப் போஷித்துக் காப்பாற்றுகிற விஷயத்தில் அன்புடன் கூடிய ஒவ்வொரு முயற்சியையும் எடுப்பது அவசியம்.*

***வசனம் 31. இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.*** *புருஷர்களுக்கும் மனைவிகளுக்கும் இடையே ஒற்றுமையை குறிக்கும் இந்த வசனம் கிறிஸ்தவர்களுக்கு கடைசி நினைப்பூட்டுதலாக ஆதியாகமம் 2:24ல் லிருந்து மேற்கோள் காட்டப்பட்டது. பவுல் தங்கள் மனைவிகளை "சொந்த சரீரங்களாக" பாவித்து அவர்களில் அன்புகூருகிற புருஷர்கள் "தங்களில் தாங்களே" அன்புகூருவது போன்றது என்று பவுல் பேசினார் (5:28). மேலும், "தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனுமில்லையே" என்றும் பவுல் சொன்னார் (5:29). ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட வாக்கியம், உண்மையில், "ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்" என்பதை வலியுறுத்துகிறது.*

***வசனம் 32.*** *பவுல் இந்தப் பகுதியை உருவகமாய் பேசுகிற ஒரு காரியத்தைச் சொல்லி, நினைப்பூட்டி, முடிவுரைக்குக் கொண்டு வருகிறார். விவாகத்தின்* ***இரகசியத்தின் மூலமாய்,*** *தேவன் புருஷனையும் மனைவியையும் "ஒரே மாம்சமாக்கியிருக்கிறார்." இரகசியமிக்க இந்த ஐக்கியம்* ***சபையை*** *நாம் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. தேவன்* ***கிறிஸ்துவை சபைக்குத்*** *தலையாக்கினார், அதாவது மணவாட்டியின் மணவாளனாக்கினார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகவும் கிறிஸ்துவின் மணவாட்டியாகவும் இருக்கிறார்கள்.*

***வசனம் 33.*** *புருஷன் மனைவி உறவுமுறை என்பது கிறிஸ்துவுக்கு சபையுடன் இருக்கிற இரகசிய உறவுமுறையின் நடைமுறை நிலையைப் பொருள்படுத்துகிறது. பவுல் எழுதும்போது,* ***எப்படியும்*** *என்று துவங்குகிறார், அது விளைவாக என்று தொடங்கி பேசுதல் என்று பொருள், "புருஷன் மனைவியைக் குறித்து நான் பேசிய கருத்துக்கு மீண்டும் வருகிறேன்" என்கிறார். பிறகு அவர் இந்த வழிகாட்டலுக்கு நீங்கலாயிருக்கிற புருஷர்கள் எவருமில்லை*

*என்கிற உண்மையை அவர் வலியுறுத்தினார். அப்போஸ்தலன், "உங்களிலும் அவனவன் ... தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்" என்று சொன்னார், அதேபோல, மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள் என்கிற கட்டளைக்கு ஒவ்வொரு மனைவியும் உட்படுகிறாள். "பயபக்தி" என்கிற ("மரியாதை" என்ற ஆங்கிலமொழிபெயர்ப்பு) வார்த்தைக்கு கிரேக்க வினைச்சொல்லான phobeō. என்கிற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது "பயம்"[32] என்ற பொருளையுடையது. அதன் பொருள் ஒரு அடிமையைப் போன்று பயப்படுவதைக் குறிப்பிடாமல் "மரியாதையினிமித்தம்"[33] காட்டப்படுகிற பயத்தைக் குறிப்பிடுகிறது. அதுவே "சுய தியாகம் பண்ணுகிற அன்புடன் கூடிய பொறுப்புடன் தன் புருஷனின் தலைமையை ஏற்றுத் தன்னை பயிற்றுவித்துக் கொள்கிறாள்."[34]*

## மேலும் கற்றுக்கொள்ள:

***சபையின் பரிசுத்தமாகுதல் (5:26)***

*எபேசியர் 5:26 ல், "பரிசுத்தமாக்குதல்," என்பது கிறிஸ்துவின் செயலாக இருக்கிறது. அது ஒரு தொடர்ச்சியானதோ மறுபடியும் மறுபடியுமோ செயல்படக் கூடியது அல்ல. கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பரிசுத்தத்தில் வளருகிறவர்கள் என்ற போதிலும், நாம் ஏற்கனவே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும் அல்லது பிரித்தெடுத்து வைக்கப்பட்டவர்களுமாயிருக்கிறோம் என்பதை பவுல் வலியுறுத்தினார்.*

*கிறிஸ்து "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்த பொழுது" சபையைப் பரிசுத்தமாக்கினார். கடந்த காலத்தின் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில், கிறிஸ்து தண்ணீர் முழுக்கினால், கிறிஸ்து சபையை பரிசுத்தமாக்கினார். ("பரிசுத்தமாக்குகிறதற்கும்" என்ற வினைச் சொல்லின் மொழிபெயர்ப்பு இது என்பதன் அடையாளமாயிருக்கிறது.) பவுல் எழுதிய பொழுது, "... திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து." என்பதை பவுல் ஒரு உருவமாக எண்ணிக் கொண்டு எழுதினார் என்று முடிவு செய்யகாரணம் ஒன்றும் இல்லை. வேத கல்விக்கு ஒரு நல்ல விதிமுறை என்னவென்றால் வாசிக்கிற வசனப்பகுதியை ஒரு வரைவடிவம் (ஒன்றைக் கூறி மற்றொன்றை தெளிவாக்குதல்) கொண்டதாகவோ, அடையாளமாகவோ, உருவகமாகவோ இருப்பதை தெளிவான காரணமாக பார்த்தாலொழிய, அவற்றை நேரடிப் பொருளில் அணுக வேண்டும். கிறிஸ்து சபையை "முழுக்கினால்" சுத்திகரித்தார் என்பது "வசனத்தையும்" தண்ணீரையும் உட்படுத்திய செயல். சொல்லர்த்தமுள்ள "தண்ணீர் என்பது கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு கொண்டிருந்த திட்டத்தின் ஒரு பகுதி" என்பதை வசனங்களினூடே காணுகிறோம்.*

*உதாரணமாக, யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் வருகைக்காக ஜனங்களை யோர்தான் நதியில் ஞானஸ்நானப்படுத்தி ஆயத்தப்படுத்தினார் (மத்தேயு 3:6). இந்த யோவானால் இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து வெளியே வந்தார் (மத்தேயு 3:16). யோவான் "சாலீம் ஊருக்கு அருகான அயினோன் எனுமிடத்தில், அதிகத்தண்ணீர் இருந்தபடியால்" ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டு வந்தார் (யோவான் 3:23). தேவனு*

டைய ராஜ்யத்தில் பிரவேசிக்க அவசியமான நிபந்தனையாக "ஜலத்தினாலும் ஆவியினாலும்" பிறக்க வேண்டும் என்று இயேசு பேசினார் (யோவான் 3:5). இயேசுவைக் குறித்த செய்தியைக் கேட்ட போது, எத்தியோப்பிய மந்திரி கேட்டான், "இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன?" என்று கேட்டார் (நடபடிகள் 8:36). அவர் தனது விசுவாசத்தை அறிக்கை செய்த போது, எத்தியோப்பியன் பிலிப்புவுடனே கூட "தண்ணீரில் இறங்கினார்கள் ... பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" (நடபடிகள் 8:38). பேதுரு புறஜாதியான கொர்நேலியுவினிடத்தில் சுவிசேஷத்தைக் கொண்டுபோனபோது, "ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா" என்று (பேதுரு) சொன்னார் (நடபடிகள் 10:47).

தீத்து 3:5ல், பவுல் தேவன் தமது "இரக்கத்தின்படியே, மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும்" நம்மை இரட்சித்தார் என்று சொன்னார், இது (எபேசியர் 5) வசனம் 26 க்கு ஒரு சிறப்பான விளக்கவுரை. கிறிஸ்து "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினாலே (சபையை) சுத்திகரித்து" என்பது தேவன் "மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும்" நம்மை இரட்சித்தார் என்பதற்குச் சமமானது. தீத்து 3:5, மனித வர்க்கம் "தாங்கள் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம்" இரட்சிக்கப்பட வில்லை, மாறாக அவருடைய "இரக்கத்தின்படியே ... தமது கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக ..." செய்தார் என்பதைக் காட்டுகிறது (தீத்து 5:5-7). தேவனுடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும், அவர் மனிதனுக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கினார், மற்றும் இந்த இரட்சிப்பு, உண்மையில் தகுதியற்ற மனிதனுக்கு ஒரு ஆஸ்தியாக அமைந்தது, அது "மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும்" சாத்தியமாயிற்று.

அலெக்சாந்தர் கேம்ப்பெல் "மறுஜென்ம முழுக்குதான்" (2 கொரிந்தியர் 5:17). "கிறிஸ்தவனாவதற்குரிய கடைசிப் படி" என்றார்.[35] அவர் யூசிபஸ் எனும் வரலாற்று ஆசிரியரை குறிப்பிட்டு ஆதி சபையின் பிதாக்கள் இந்த செயலை ஞானஸ்நானமாக புரிந்து கொண்டிருந்தனர் என்றார்.[36] பெரும்பாலான விரிவுரையாளர்கள் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர். கேம்ப்பெல் மேலும் குறிப்பிடுகையில் "மறுஜென்ம முழுக்கு" என்பதும் "சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரம்" என்பதும் (எபிரெயர் 10:22), அல்லது "ஜலத்தினால் பிறப்பது" என்பதும் (யோவான் 3:5) மற்றும், நோவா தண்ணீரால் இரட்சிக்கப்பட்டது போல (பாதுகாக்கப்பட்டது போல), "இப்பொழுது ஞானஸ்நானம் (நம்மை) இரட்சிக்கிறது" என்பதும் சமமானது என உறுதிப்படுத்தினார் (1 பேதுரு 3:21). கேம்ப்பெல் "பரிசுத்த ஆவியினால் புதிதாக்கப்படுதல்" என்பதும் எபேசியர் 5:26 ல் "திருவசனத்தைக் கொண்டு சுத்திகரிக்கப்படுதலும்" ஒன்றே என்பதை மேலும் குறிப்பிட்டார், "ஏனெனில்" பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலம் சுத்தமாக்குகிறார் அல்லது "புனிதமாக்குகிறார்"[37] என்றும் சொன்னார் (யோவான் 15:3).

1 கொரிந்தியர் 6:11ல், பவுல் கொரிந்தியர்கள் "கழுவப்பட்டார்கள்" "பரிசுத்தமாக்கப்பட்டார்கள்" என்று சொன்னார், அது எபேசியர்கள்

பரிசுத்தமாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, கழுவப்பட்டது போன்றது. இரண்டு வசனங்களும், "பாவமன்னிப்பிற்கென்று" தண்ணீரில் பெறும் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுகிறது என்பதில் சந்தேகமில்லை (நடபடிகள் 2:38), மேலும் "கிறிஸ்துவுக்குள்ளாவதற்கும்" (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27), "ஒரே சரீரத்திற்குள்ளாவதற்கும்" கூட அந்த வசனங்கள் குறிப்பிடுகின்றன (1 கொரிந்தியர் 12:13). வரலாற்றில் ஒரு குறிப்பிடப்பட்ட நேரத்தில், கிறிஸ்து சபைக்காகத் தம்மையே மரணத்தில் ஒப்புக்கொடுத்தார். அவருடைய சபையில் இருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் பாவத்துக்கும் சுயத்துக்கும் மரித்து, நேரம் வரும் பொழுது, கிறிஸ்துவுக்குத் தம்மைத்தாமே ஞானஸ்நானத்திலே ஒப்புக்கொடுக்க வேண்டும். பின்பு அவன் ஒரு புதிய ஜீவனுக்கு உயிர்த்தெழுப்பப்படுகிறான் (ரோமர் 6:4 - ஐக் காண்க). ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனித்தனியே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், எனவே சபை அநேக அங்கங்களைக் கொண்ட சரீரம், பரிசுத்தமாக்கப்படுகிறது.

## கைக்கொள்ளுதல்

***சரியான பாதையில் நடத்தல் (2:1-10; 4:1, 17; 5:2, 8, 15)***

*"நடத்தல் என்பது வாழ்வதை உருவகமாகச் சொல்லுவது, கிறிஸ்தவர்களாகிய நாம், எப்படி நடந்து கொள்ளுகிறோம், யாருடன் நடக்கிறோம் என்பது குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்."*

*நாம் உலகத்தாரைப் போல நடத்தல் கூடாது* (2:2). உலகத்திற்கேற்ற வழக்கத்தின்படி வாழ்கிறவர்கள் தங்களை இழந்தவர் களாவர்; அவர்கள் இந்த தற்காலிக உலகத்துக்குரியவர்கள், இந்த உலகம் தேவனிடத்திலிருந்து அந்நியமாக்கப்பட்ட ஒன்று. அவர்கள் ஒரு ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிருக்கிறார்கள், அது தேவனுடைய ராஜ்யத்தின் எதிரிடையானதாக இருக்கிறது.

*சாத்தானுடைய வழக்கத்துக் கேற்றவர்களாய் நாம் நடக்கக் கூடாது* (2:2). இழந்துபோன ஆத்துமாக்கள் "ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய" மற்றும் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆவியாகிய சாத்தானோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள்," அவர்களின் வாழ்க்கை கலகத்தால் ஆளப்படுகிறது.

*மாம்ச இச்சையின்படி நாம் நடந்துகொள்ளக்கூடாது* (2:3). இழந்து போனவர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட வரும் தங்களுடைய சொந்த உணர்வுகளின்படி வாழ்கிறவர்கள், தேவன் அவர்கள் வாழவேண்டுகிற வழிமுறைகளில் வாழாதவர்கள்.

*நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாக வாழக் கூடாது* (2:3). இழந்துபோனவர்கள் "பாவச் சுபாவம்" பெற்றிருந்த, ஆதாமைப் போல் வாழ்கிறவர்களும், தேவனுடைய கோபாக்கினைக்குரியவர்களுமாவர். ரோமர் 1:18 "சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லா வித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்தி லிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது," என்று எச்சரிக்கிறது.

*நாம் பாத்திரராய் நடந்து கொள்ள வேண்டியவர்கள்* (4:1). "அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் [நாம்]" வாழும்படி பவுல்

கிறிஸ்தவர்களைத் தூண்டினார். நாம் தேவனுடைய கிருபையின்படியும் மகிமையின்படியும் வாழ்வதற்கு அவருடைய பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டிருக்கிறோம் (காண்க 1 தெசலோனிக்கேயர் 2:12; 2 தீமோத்தேயு 1:9). நாம் மதியற்றவர்களாய் நடந்து கொள்ளக் கூடாது (4:17). இழந்துபோனவர்கள் ஆவிக்குரிய வழிகாட்டல் இல்லாதவர்களாய் வாழ்கிறார்கள். கிறிஸ்து ஒரு நோக்கத்துடன் வாழ்ந்தார், நாமும் அவருடைய முன் மாதிரியைப் பின்பற்றுவோமானால், ஆசீர்வதிக்கப்படுவோம் (காண்க 1 பேதுரு 2:21; 3:9).

*நாம் அன்பிலே நடந்து கொள்ள வேண்டியவர்கள்* (5:2). தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4), மற்றும் நமது மிகப் பெரிய இலக்கு நாம் அவரிடத்தில் நம்முடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்புகூர வேண்டியவர்கள். கூடுதலாக, நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்க வேண்டும் (காண்க மத்தேயு 22:37-39).

*நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ள வேண்டியவர்கள்* (5:8). நாம் இனியும் “அந்தகாரத்தில்” நடக்கக் கூடாது, இப்பொழுது நாம் “கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறோம்.”

*நாம் ஞானமுள்ளவர்களாய் நடக்க வேண்டியவர்கள்* (5:15, 16). நாம் நமது நாட்களை கர்த்தருக்குச் செய்யும் ஊழியத்தில் செலவிட வேண்டியவர்கள், அப்படிச் செய்ய திராணியிருக்கும்போதே செய்யக்கடவோம் (காண்க யோவான் 9:4).

ஜெய் லோக்ஹார்ட்

**ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை (5:18-21)**

பழைய ஏற்பாட்டில், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தேவாலயத்தைக் கொண்டிருந்தார்; புதிய ஏற்பாட்டில், தேவன் ஜனங்களையே தம்முடைய ஆலயத்திற்குக் கொண்டிருக்கிறார். அவரவருடைய புதிய பிறப்பின் போது (ஞானஸ்நானத்தின் போது), ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாகிறார்கள். பெந்தெகோஸ்தே நாளில், பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்று சொன்னார் (நடபடிகள் 2:38). நாம் மறுபடியும் பிறந்திருப்போமானால், பிறகு நம்மிலே யாரோ ஒருவரை - தேவனுடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருக்கிறோம் - இந்த தெய்வீக நடைமுறை ஞானஸ்நானத்தில் தான் துவங்குகிறது; கிறிஸ்தவன் நாள்தோறும் தேவனுடைய ஆவியோடு வாழ்கிறான்.

பவுல் எபேசியர்களை ஆவியினால் நிறைந்த வாழ்க்கையை வாழும்படி ஆலோசனை கொடுத்தார் (5:18). இது தேவைக்கேற்ப தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்றல்ல; இது ஒரு கட்டளை. ஆவியினால் நிறைந்த வாழ்க்கை என்பது ஒரு உயர்ந்த சிறப்பு நிலையை அடைய ஆவிக்குரிய ரீதியில் நாம் ஏதோ சில காரியங்களைச் செய்வதல்ல; அது மறுபடியும் பிறந்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் செய்ய வேண்டிய பொறுப்பாய் இருக்கிறது. நாம் ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.

இந்த தெய்வீக நிபந்தனையை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்

என்று எப்படி நமக்குத் தெரியும்? ஆவியானவரால் நிரப்பப்பட்டுக் கொண்டிருப் பவர்களின் அடையாளங்கள் என்ன? வசனம் 18 நமக்கு கட்டளையிடுகிறது, பின்வரும் வசனங்கள் ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசிகளின் மூன்று சிறப்பு அடையாளங்களை கொடுக்கிறது. அவைகள் கிரேக்க மூல வசனப்பகுதியில் எச்சவினையாகச் சொல்லப்படுகிறது, அந்த வார்த்தைகள் ஒரு தொடர் செயலைக் குறிப்பிடுகிறது.

ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கையின் மூன்று அடையாளக் குறிகள் யாவை?

*ஒருவருக்கொருவர் உற்சாகமளிக்கத்தக்க வகையில் "பேசுதல்."* "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணி" (5:19).

நம்முடைய பாடல்கள் நம்முடைய கர்த்தராகிய தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பைப் பிரதிபலிக்கிறது. அது துதிசெலுத்துதலின் வெளிப்பாடாயிருக்கிறது. இது மகிழ்ச்சிகரமான ஆராதனையின் ஒரு பகுதி. தேவனைத் துதிக்கும் துதிகளினால் நம்முடைய மகிழ்ச்சி நிரம்பி வழியும். நமது மீட்பராகிய, தேவனுக்கு நன்றி செலுத்துவதில் நமது ஆத்துமாக்கள் சத்தமாய் ஆர்ப்பரித்து அலங்கரிக்க வேண்டும்.

இந்த "பேசுதல்" என்பது "சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும், ஞானப்பாட்டுக்களினாலும்," இடம் பெறுகிறது என்று பவுல் சொன்னார். நாம் இந்தப் பதங்களினால் அதிக தொலைவுக்கு வேறுபாட்டை ஏற்படுத்த இயலாது, இருப்பினும் சில வித்தியாசங்கள் இருக்க வேண்டும். "சங்கீதங்கள்" என்பது பழைய ஏற்பாட்டுச் சங்கீதங்கள், ஆதிசபையின் ஒரே பாடல் புத்தகம். பவுலின் கட்டளை தேவனை அவருடைய சொந்த ஏவப்பட்ட துதி களின் புத்தகத்திலிருந்து அவரைத் துதிக்க வேண்டும் என்பது. நம்முடைய மனநிலை என்ன உணர்வில் இருந்தாலும், நமது வருத்தங்களோ சந்தோஷமோ எதுவாயிருந்தாலும், நம்முடைய பிரச்சனை எதுவாயிருந்தாலும், நமது உணர்வுகளை வெளிப்படுத்த ஏதோ ஒரு சங்கீதத்தைக் கண்டு பிடிக்கலாம்.

"கீர்த்தனைகள்" என்பது தேவனுக்குச் செலுத்தும் ஸ்தோத்திரங்களை வழிகாட்டுவது. ஒரு கீர்த்தனை என்பது ஒப்புயர்வற்ற ரீதியில் ஒரு கிறிஸ்தவனின் படைப்பு, சங்கீதங்களோ யூத மதத்திலிருந்து சபைக்குள் கொண்டுவரப்பட்டவை.

"ஞானப்பாட்டுக்கள்" நமது விசுவாசத்தை வெளிப்படுத்த ஏதுவாக குறைவான அமைப்பைப் பெற்ற பாடல்கள், நமது சந்தோஷங்களையும், நன்றியறிதலையும் இவைகள் மூலம் வெளிக் காட்டக் கூடும். கீர்த்தனைகள் சங்கீதங்கள் ஆகியவைகளைக் காட்டிலும் இவை அதிகமாக தனிப்பட்ட வகையைச் சார்ந்தது, மற்றும் சந்ததியிலிருந்து மற்றொரு சந்ததிக்கு கையளிக்கப்பட்டது.

நாம் கர்த்தரைப்பாடி இருதயத்திலே கீர்த்தனம் பண்ண வேண்டியவர்கள். மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் மூலக்கருத்தின் பொருள் உண்மையில் ஆராதனையில் இருதயத்தின் கம்பிகளை மீட்டு "கீர்த்தனம் பண்ண வேண்டும்." இருதயமே தேவனுக்கு நாம் கொடுக்கிற உண்மையான துதிகளின் இருப்பிடம்.

நமது ஆராதனையின் உள்நோக்கம் "கர்த்தருக்கு" என்ற வார்த்தைகளில் இருக்கிறது. பாடுதல் என்பது நம்மை நாம் உயர்த்திக் காட்டவோ அல்லது நமது சப்தங்களை எவ்வளவு நேர்த்தியாய் கலந்து ஒற்றுமையாய் பாடமுடியும் என்று காட்டவோ அல்ல. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பட்டுக்களினாலும் நமது மீட்பருக்கு கனத்தையும் துதிகளையும் கொண்டுவருவதே நமது தலையாய உள் நோக்கமாகும்.

*புகழுடன் தேவனுக்கு "நன்றி செலுத்துதல்."* "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும், பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க" வேண்டும் (5:20).

பாடுதல் மூலம் நாம் எப்படிப்பட்ட உறவுமுறையை தேவனோடு கொண்டிருக்கிறோம் என்பதை காட்டுகிறது போல ஸ்தோத்திரஞ் செலுத்துதல் மூலம் நம்முடைய சூழ்நிலையிலிருக்கிற உறவுமுறையை பிரதிபலிக்கிறோம். நாம் ஆவியினால் நிறைந்தவர்களாயிருக்கும் போது, நாம் எல்லாவற்றிற்கும் நன்றியுள்ளவர்களாயிருப்போம்.

இது எப்படிப்பட்ட நன்றி செலுத்துதல்? அது சரியான வழியில் நடத்தப்பட்ட நன்றியுணர்வு: "... எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்தல்." சிலர் "இன்றைக்கு நான் அதிர்ஷ்டசாலி" என்று கூறக் கேட்கிறோம், ஆகிலும் நாம் தேவனுக்கு மட்டுமே அதன் மகிமையை செலுத்த வேண்டும். நாம் "எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்கிற ..." நன்றியுணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டியவர்கள்.

பவுல் தொடர்ந்து "எல்லாவற்றிற்காகவும்" என்றார். நமது வாழ்வில் வரும் நல்ல காரியங்களுக்காக நாம் சுலபமாக நன்றி செலுத்திவிடலாம். வாழ்க்கையில் வரும் கடினமான சூழ்நிலையின் போது எப்படி? காரியங்கள் அப்படி ஏன் இடம் பெறுகின்ற, என்பதை நாம் புரிந்து கொள்ளக் கூடாதவர்களாயிருக்கலாம், ஆகிலும் அவைகள் மூலம் நன்மையுண்டாகக் கூடும் என்று இன்னமும் உறுதியாக விசுவாசிக்கலாம்.

*ஒருவருக்கொருவர் தெய்வ பயத்துடன் கீழ்ப்படிந்திருத்தல்.* "கிறிஸ்துவுக்கு தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்" (5:21; NIV).

"கீழ்ப்படிதல்" நம்மில் ஒருவருக்கொருவர் கொண்டு உள்ள உறவுமுறையை உட்படுத்தியது. பவுல் எழுதின போது, "கீழ்ப்படிதல்" எனும் வார்த்தை ஒரு இராணுவபதமாகப்பயன்படுத்தப்பட்டது. அதன் நேரடிப் பொருள் சமமான ஒருவர் இன்னொரு சமமானவருக்குத் தன்னை கீழ்ப்படுத்துதல். அது எவ்விதத்திலும் தாழ்வு மனப்பான்மையை தெளிவாக வெளிக்காட்டப் படாதது. குமாரனாகிய தேவன் பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்தார். அவர் முற்றிலும் பிதாவாகிய தேவனுக்கு சமமாயிருந்தார், ஆகிலும் தாம் மனமுவந்து கீழ்ப்படிந்தார்.

மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் - ஆனால் அது ஒரு கொள்ளையின் விளக்கம் மட்டுமே. அவர்கள் மட்டுமே கீழ்ப்படிதலை கைக்கொள்ளும்படி போதிக்கப்பட்டவர்களல்ல. கீழ்ப்படிதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சொல்லப்படுவது. கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு எவ்வளவாய்க் கீழ்ப்படிகிறோமோ அவ்வளவாய் நாம் ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள். சில சகோதர சகோதரிகள் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் தோல்வியையே காணுகிறார்கள்,

ஏனெனில் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக நிற்கிறார்கள். ஒருவர் தனது சுய உரிமையை பிடிவாதமாகக் கோரும் வரை, அவர் ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் வரமாட்டார். நாம் சுயத்துக்கு மரித்தவர்கள் (காண்க கலாத்தியர் 2:20). மரித்தவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

ஒரு கிறிஸ்தவன் தன்னை மற்றொரு கிறிஸ்தவனுக்குக் கீழாக்கிக் கொள்வது ஏன்? அவனுக்கு ஊழியம் செய்யவே. சிலர் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்க விரும்புகின்றனர் ஆனாலும் மற்றவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் உதவி செய்கிற தொல்லைக்குத் தன்னை உட்படுத்திகொள்ள விரும்புவதில்லை. பவுல், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவை கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்று சொன்னார் (2 கொரிந்தியர் 4:5). நாம் ஒருவருக்கொருவர் அன்பினாலே ஊழியம் செய்ய வேண்டியவர்கள்.

பவுல், "கிறிஸ்துவுக்கு தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்று சொன்னார் (NIV). நாம் இயேசுவினிமித்தம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிகிறோம். அவர் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்தார்; அவர் முன்மாதிரியை வைத்தார். ஆவியினால் நிறைந்திருப்பது என்பது அவரைப் போல இருப்பது.

*முடிவுரை.* நாம் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கும் போது, நம்மை ஆளுவது எது, நம்மைக் கட்டுப்படுத்துவது என்ன என்பதை இந்த உலகம் பார்க்கிறது. நாம் இதை நம்முடைய பேச்சாலும், ஸ்தோத்திரம் செய்வதாலும், கீழ்ப்படிதலாலும் அவர்கள் காணும்படி செய்ய முடியும்.

### நம்முடைய ஸ்தோத்திரம் செலுத்துதல் (5:20)

5:20 ஐ நாம் வாசிக்கும்போது, நம்முடைய ஸ்தோத்திரம் செலுத்துவதற்காக அனைத்து வழி காட்டலும் உட்பட்டிருப்பதை நாம் பார்க்க முடியும்:

*வழிகாட்டலின் சரியான முறை: "... பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்தல்."*

தொடரும் காலவரை: "*எப்போழுதும் ... ஸ்தோத்தரித்து.*"

*முழுமையான அளவு: "...எல்லாவற்றிற்காகவும்.*"

### அதிகப்பட்ச அளவின் திருமணம் (5:21-33)

அநேக திருமணங்களில் உபத்திரவங்கள் ஏன் ஏற்படுகிறது? திருமணமாகி தொடர்ந்து அந்தத் திருமண வாழ்வில் நிலைத்திருந்தாலும், எச்சரிக்கை விடுக்கத்தக்க ஆபத்தின் சதவீதத்தைக் கொண்ட தம்பதிகள் தங்களுடைய திருமணம் "சந்தோஷக்கேடாக" பார்ப்பது ஏன்? ஆணும் பெண்ணும் தங்களுடைய வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் இந்த வித திட்டத்தைத் தேவன் கொண்டிருக்க வில்லை. அவர் ஒவ்வொரு திருமணமும் ஒரு சுற்றுச் சுழலை ஏற்படுத்தி அதிலே புருஷனும் மனைவியும் சந்தோஷமாக வாழ்ந்து அவர்களால் இயன்றவரை மிகச் சிறப்பான கிறிஸ்தவர்களாக வேண்டும் என்று விரும்புகிறார்.

5:21-33ல், நமது திருமண பங்காளருடன் சந்தோஷகரமான உறவுமுறையை கொண்டிருக்க உதவும்படி நம் ஒவ்வொருவருக்கும் பவுல் மனதால் அறியும் திராணியைக் கொடுத்திருக்கிறார். புருஷன், மனைவிக்கு தலையாயிருக்க

வேண்டும் என்ற திட்டத்தை, தேவன் கொடுத்ததே ஒரு அன்புகூருகிற தலைவனாக இருக்க வேண்டும் என்பது தான்; மற்றும் மனைவிக்கு காட்டிய அவரது வழி அவள் உண்மையாய் அவரைப் பின்பற்றக் கூடியவளாயிருக்க வேண்டும் என்பதுதான்.

*புருஷர்களுக்கு தேவனளித்த தலைமைத்துவம்.*

*(1) புருஷன் தலையாயிருக்கிறான் (5:23).* பவுல் மனைவியின் கீழ்ப்படிதலைக் குறித்து பேசுகையில், ஒரு வாக்கியம் கூட புருஷனுடைய ஆதிக்கத் தன்மை மனைவியின்மேல் இருக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை. அவர் ஒருபோதும், "புருஷர்களே, உங்கள் மனைவிகளை உங்களுக்குக் கீழ்ப்படியச் செய்யுங்கள்! அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்துங்கள்!" என்று எழுதவில்லை. பவுல் இது சம்பந்தமாக எங்காவது ஒரு ஓரத்தில் கூட அப்படி பொருள்படத்தக்கதாக குறிப்பிட வில்லை.

புருஷன் "மனைவிக்கு தலையாயிருக்கிறான்" என்பதன் பொருள் என்ன? அவன் வழிநடத்துகிற தலைவனாயிருக்கிறான். தனது குடும்பத்தில் தனக்குள்ள ஸ்தானத்தை முறையாக புரிந்து கொள்ளாத எந்த புருஷனும் உபத்திரவப்படுவான். தனது மனைவி தனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று பயமுறுத்தி பணிய வைக்கிற ஒரு புருஷன் கிறிஸ்து தமது மணவாட்டியை. சபையை, எப்படி கீழ்ப்படிதலுக்குக் கொண்டுவந்தார் என்பதை கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். அவர் சபையை அன்புகூர்ந்ததின் மூலம், சபைக்காக மரித்ததன் மூலம் அதை கீழ்ப்படிதலுள்ளதாக்கினார், கத்தி கூச்சலிட்டு அவர் தமது கட்டளைகளைக் கொடுக்கவில்லை. தனது திருமணத்தின் அதிகபட்சமான அளவு வெற்றியுள்ளதாக்க புருஷன் தன் மனைவியுடன் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

புருஷன் தன் குடும்பத்தில் கொண்டுள்ள உரிமைகள் போக்குவரத்துச்சட்டத்தில் அவனுக்குள்ள உரிமைகளுக்கு ஒப்பானது. சில நேரங்களில், உதாரணமாக, அவன் வண்டி ஓட்டிச் செல்லும் போது தன் விருப்பப்படியான பாதையைக் கேட்டு கோரிக்கை விடுக்க முடியாது. போக்குவரத்து வழிகாட்டி விளக்கு தொடர்ந்து அவன் பயணிக்க குறிப்புக் காட்டும்போது, வேகத்தைக் குறைக்க இயலாத பெரிய லாரிகள் பக்க வாட்டிலிருந்து நெருங்கி வருமானால், அப்போது அவன் தன் உரிமைகளைக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டான்!

சில புருஷர்கள் தங்களுடைய உரிமைக்காக கோரிக்கை வைப்பதில் நிலையற்ற ரீதியில் தவறு செய்கின்றனர். அவர்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டியது கட்டாயம் என்றும், புருஷலட்சணமாய் தங்கள் அதிகாரத்தை தங்கள் வழியில் செயல்படுத்துவது அவசியம் என்றும் நம்புகிறார்கள். அதன் விளைவு அவர்கள் தங்கள் திருமணங்களை சிதைக்கிறார்கள். குடும்பத்தில் ஒரு புருஷனுக்குக் கொடுக்கப்பட்ட - தேவனுடைய ஸ்தானம் அவன் சர்வாதிகாரியாக இருப்பதல்ல, ஆனால் ஒரு அன்பான தலைவனாக நடந்து கொள்வதே.

*(2) கிறிஸ்துவைப் போலவே புருஷனும் தலையாயிருக்கிறான் (5:23).* ஒரு புருஷன் சர்வாதிகாரமற்ற முறையில் எப்படித் தன்னுடைய குடும்பத்தை நடத்தக் கூடும்? "கிறிஸ்துவைப் போல" சபையை நடத்துகிற விதத்தில் நடத்துவதுதான். சிறிய வார்த்தையாகிய "போல" என்ற வார்த்தையை

தாண்டிப் போய்விடக் கூடாது. அதுதான் திறவு கோல். தனது குடும்பத்துக்குப் பொறுப்பு கொண்ட கணவன், வேதாகமத்தை ஒரு தடிமனான தடியைப்போல பயன்படுத்தி, தனது மனைவியினிடத்தில், "கீழ்ப்படி" என்று சொல்ல முடியாது.

இயேசு எப்பொழுதாகிலும் தமது மணவாட்டியை பலவந்தமாக கீழ்ப்படியச் செய்துள்ளாரா? அவர் அப்படிச் செய்திருப்பாரேயானால், சபை நிச்சயமாக வித்தியாசப்பட்டதாக இருந்திருக்கும். உண்மையில், சபையிலுள்ள அநேக அங்கத்தினர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வில்லை. இயேசு எப்படி தமது மணவாட்டியை நடத்துகிறார்? அவர் அவளிடத்தில் வேண்டிக் கேட்கிறார், அவளுக்காக மரித்தார்; அவளிடத்தில் அன்புகூருகிறார். 5:24 ன்படி, சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, மனைவியானவள் தன் சொந்த புருஷருக்கு எந்தக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். சபைக்கு இயேசுவின் தலைமைத்துவமாதிரியைப் பின்பற்றினால் புருஷனும் தனது சொந்த மனைவியினிடத்தில் தனது தலைமைத்துவத்தைக் கொண்டிருப்பது சாத்தியமே.

*(3) கிறிஸ்துவைப் போல புருஷன் அன்புகூர வேண்டியவன் (5:25).*

*அது ஒரு சுயநலமற்ற அன்பு.* கிறிஸ்து எப்படி தமது மணவாட்டியாகிய, சபையில் அன்புகூர்ந்தார்? *சுய நலமில்லாமல்* அவர் அவளின் அன்புகூர்ந்தார். ஏனெனில் அவர் தம்மைத்தாமே அவளுக்காக ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்து தன்னுடைய சுய ஆசைகளையும் தேவைகளையும் முதலாவதாக வைக்கவில்லை. அப்படிச் செய்திருப்பாரானால், அவர் மகிமை நிறை பொன் வீதியை ஒருபோதும் விட்டு வந்திருக்க மாட்டார். மாறாக, இயேசு தமது மணவாட்டியின் தேவையை முதலாவதாக வைத்தார். "மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று சொல்லி, அவர் தம்முடைய சுயநலமற்ற அன்பை வெளிப்படுத்தினார் (மாற்கு 10:45).

ஒருவன் மணமுடிக்கும் போது, தனது சுயத்தேவையைக்குறித்த கண்ணோட்டத்தை விட்டு விடுகிறான். அவன் தன்மனைவியை திருமணம் செய்து அவளுடன் ஒரே மாம்சமாகிறான். இனியும் அவன் தான் விரும்புகிறதைச் செய்யும் தீர்மானத்தை சுயமாய் எடுக்க முடியாது. கிறிஸ்து சபைக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார், அதேபோல புருஷன் தன்னைத்தானே தன் மனைவிக்கு அற்பணிக்க வேண்டும். அவன் எடுக்கிற ஒவ்வொரு முடிவிலும் அவளுடைய நலம் மையம் வைக்க வேண்டும். அவன் அவளை சுயநலமற்ற முறையில் அன்புகூர வேண்டும்.

*ஒரு அர்ப்பணிக்கப்பட்ட அன்பு.* புருஷன் தன்னைத் *தியாகம் பண்ணி* தன் மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும், ஏனெனில் கிறிஸ்து சபைக்காக மரித்தார், என்று வேதம் கூறுகிறது. அவர் உண்மையாக, நேரடியாக முழுமையாக அப்படிச் செய்தார். ஒரு புருஷன் "மரித்தாலொழிய" இயேசு தம்முடைய மணவாட்டியை அன்புகூர்ந்தது போல இவன் தன் மனைவியிடத்தில் அன்புகூர முடியாது. அதாவது, அவன் தனக்குத் தானே மரிக்க வேண்டும். அவன் தனது சுய வழியை வலியுறுத்தாமலிருக்க மரித்திருக்க வேண்டும்.

இயேசு சபைக்காக மரித்தது மாத்திரமல்ல, ஆனால் சபை ஒரு சபையாக உருவாவதற்கு முன், அங்கத்தினர்கள் தங்களுக்குத் தாங்களே (சுயத்தை)

மரிக்கச் செய்து கிறிஸ்துவுக்குள் ஜீவித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். பெரும்பாலான குடும்பங்களின் தேவை என்ன? அவர்களுக்கு இரண்டு இறுதிச் சடங்குகளும் ஒரு திருமணமும் தேவை! ஒரு மனைவி சுயத்தை மரிக்கச் செய்கிறாள்; ஒரு புருஷனும் தன் சுயத்தை மரிக்கச் செய்கிறான். ஒரு புருஷன் தன்னைத் தியாகம் பண்ணி அவளிடத்தில் அன்பு வைக்கவிருப்பமுள்ளவனாய் இருக்கிறான். அவன் "என் மனைவிக்காக விட்டுவிடுகிற அளவுக்கு அவளைக் காட்டிலும் விலையேறப்பட்ட காரியம் எதுவுமில்லை" என்று சொல்லுகிறான்!

*ஒரு பரிசுத்தமாக்கும் அன்பு.* இன்னும் அதிகமாக இருக்கிறது. இயேசுவும் தனது மணவாட்டியினிடத்தில் *பரிசுத்தமாக்கும் அன்பைக்* கொண்டிருந்தார்: "... அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (5:26, 27).

கிறிஸ்துவின் ஊழியம் என்ன செய்யும்படி இருந்தது? தன் மணவாட்டியை பரிசுத்தமாக்குவதும் அலங்கரிப்பதுமே. ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு புருஷன் தான் தலைமைத்துவம் கொண்டவனாயிருக்க விரும்பினால் அவனுடைய வேலை என்ன? அது அவன் தன் மனைவியை பிரகாசிக்கச் செய்கிறவனும் அழகானவளாய் மாற்றுவதுமாகிய பணியைச் செய்கிறான்.

ஒரு புருஷன் தன் மனைவியை நடத்துகிறவனானபடியால், அவளைப் பரிசுத்தமாக்கி, அவளுக்குப் போதித்து, ஆவிக்குரிய பாதுகாப்பை அவளுக்கு அளித்து நடத்துகிறான். அவளை அவன் ஒருபோதும் (பாவத்துடன் அல்லது தவறுடன்) ஒத்துப்போகச் செய்யும் சூழ்நிலைக்குத் தள்ளாமல் இருக்கிறான், அப்படிச் செய்வது அவள் தர்க்கம் செய்யவோ, கோபப்படவோ செய்து பாவம் செய்ய ஏதுவாக்கி விடும். எனவே அவளை அவன் தீட்டுப்பட (கறை படிந்தவளாக) விடமாட்டான். அவளுடைய வாழ்க்கைக்குள் வரக்கூடிய எந்த ஒரு அசுத்தத்திற்கும் இடமளிக்க விட்டுவிட மாட்டான். அவன் தனது மனைவியை பரிசுத்தமாக்கும் அன்புடன் நேசிக்கிறான்.

*திருப்தியளிக்கும் அன்பு.* அவன் மேலும் தன் மனைவியை திருப்தி யளிக்கும் அன்புடன் அன்புகூரவேண்டும்: "அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்" (5:28).

ஒரு மனிதன் தன் சொந்த சரீரத்துடன் என்ன செய்வான்? அதைத் திருப்திபடுத்த முயற்சிப்பான். அதற்கு தாகம் எடுக்கும் போது, தண்ணீர் குடிக்கிறான். அவன் சரீரம் பசியடையும் போது, அதைப் பராமரிக்கிறான். அது புண்படும்போது அதை கவனிக்கிறான். இப்படித்தான் அவன் தன் மனைவியினிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். அவன் அவளுடைய தேவையை முன்னறிந்து பிறகு அந்தத் தேவைகளைச் சந்திக்கிறான். அப்படிச் செய்கிற புருஷனிடத்தில் கீழ்ப்படிந்திருக்க மறுக்கும் மனைவிகள் அநேகர் இருக்க மாட்டார்கள், அவனுடைய முழு திருமணமும் அவனுடைய மனைவியின் ஒவ்வொரு தேவையையும் திருப்தி செய்கிறதின் மேல் கட்டப்பட்டுள்ளது.

சில திருமணங்களில் உள்ள பிரச்சனைகள் என்னவெனில் புருஷன் தன்

மனைவி தன்னுடைய சரீரத்தின் விஸ்தரிக்கப்பட்ட பகுதி என்று காணாதது தான், மாறாக அவளை ஒரு ஆஸ்திப்பொருளாகப் பார்க்கிறான். அவனுடைய இந்த ஆஸ்திப்பொருள் பழையதாகும் போது, ஏதோ ஒரு புதிய பொருளைத் தேடுகிறான். இதற்கு முரண்பாடாக, ஒரு கிறிஸ்தவ புருஷனாக, தன் மனைவிக்கு வயது கூடினாலும், அவன் அவளுடைய உள்ளான அழகை கூடுதலாகக் கண்டு அவளுக்கு அன்பு காட்டி, அக்கறை காட்டி இன்னும் அதிகமாய் பராமரிக்கிறான், தன் மனைவியின் தேவையை பூர்த்திசெய்யாத ஒரு புருஷன் ஆவிக்குரிய தற்கொலையைச் செய்து கொள்ளுகிறான். ஏனெனில் அவன் அவளோடு ஒரே சரீரமாயிருக்கிறான்.

*உச்சக்கட்ட அன்பு.* இறுதியாக, திருமணம் செய்யும் பழக்கத்தில், ஒரு மனிதன் தன் மனைவியினிடத்தில் *உச்சக்கட்ட அன்பைக்* கொண்டிருக்க கோரப்படுகிறான்: "இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (5:31).

ஒரு மனிதனுடைய திருமணம் பூமிக்குரிய மற்ற எல்லா கட்டுகளுக்கும் முன்னிடம் பெற வேண்டும். ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவு முறை கிறிஸ்துவுக்கும் சபைக்கும் பவுலால் ஒப்பிடப்பட்டது, அது ஆவிக்குரிய உயர்ந்த உறவுமுறைகள். மிக உயர்ந்த மனித உறவுமுறை கட்டுக்கோப்பு என்பது ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையிலானது அல்ல, ஆனால் ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் இடையிலானது.

*மனைவிகளுக்கு தேவன் அளித்த வழிகள்.*

(1) தேவை: "மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் ..." (5:22). "கீழ்ப்படிதல்" என்பது ஒருவர் மனமுவந்து மற்றொருவருடைய அதிகாரத்துக்கு கீழ் தன்னை வைப்பது என்று பொருள். ஒரு மனைவி உலகப் பிரகாரமான எண்ணமுள்ளவளாக இருந்தால், தனது புருஷனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற உபதேசத்துக்கு எதிராக அவள் கலகம் பண்ணுவாள். உலகம் சிந்திக்கிறபடி அவள் எவ்வளவாய் சிந்திக்கிறாளோ, அவ்வளவாய் அவள் கீழ்ப்படிய மறுப்பாள்.

ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு நபர் தேவன் அளித்துள்ள அதிகாரத்துக்கு கீழ்ப்படிய மனவிருப்பமுடையவராய் இருப்பார். வசனம் 21 சொல்லுகிறது, "கிறிஸ்துவுக்குப் பயப்படுகிற பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்." கீழ்ப்படிதல் என்பது மனைவிகளுக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல; அது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் சொல்லப்பட்டது. குடும்பத்தில், மனைவி தனது சொந்த புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கும்படி வேதாகமம் சொல்லுகிறது.

ஷேக்ஸ்பியர், "இரண்டுபேர் குதிரையின் மேல் பயணம் பண்ணினால், ஒருவர் பின்னால்தான் அமர வேண்டும்" என்றார்.[38] அது குதிரை சவாரி செய்பவருக்கு நேர்ந்த தாழ்ச்சியல்ல, மாறாக அது நடைமுறை அவசியம். அதேபோல, குடும்பத்திலும், கீழ்ப்படிதல் என்று வரும் பொழுது, அது சம அந்தஸ்து இல்லாமை அல்லது தாழ்ச்சி என்று பொருளல்ல; அது ஒரு நடை முறைத் தேவை. மனைவிதான் பின்னால் அமர்ந்து "பயணிக்க வேண்டும்" என்று தேவன் சொல்லுகிறார்.

மனைவிகள் வெளித்தோற்றத்தில் மட்டுமே தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிவார்களானால் அவர்கள் உண்மையில் கீழ்ப்படிந்திருப்பவர்கள் அல்ல.

வேதாகமம் கூறும் கீழ்ப்படிதல் என்பது வெளித்தோற்றத்திலும் உள்ளான எண்ணங்களிலும் கீழ்ப்படிவதை உட்படுத்தியது. அது மட்டுமே தேவனுடைய கோரிக்கையை நிறைவேற்றும்.

(2) காரணம்: "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சக ராயிருக்கிறார்" (5:23) குடும்பத்திலே மனைவிக்கு அப்படியொரு தேவையை தேவன் ஏன் அமைத்தார்? மனைவியானவள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதற்கான காரணம் தேவன் புருஷனையே மனைவிக்குத் தலையாக தெரிந்து கொண்டார் என்பதே (காண்க ஆதியாகமம் 3:16). இது ஒரு தண்டனைக்காக அல்ல, ஆனால் ஒரு நோக்கத்திற்காக. தேவன், தம்முடைய பெரிதான ஞானத்தினால், ஒரு ஒழுங்குமுறை - சமுதாயத்திலோ, அரசாங்கத்திலோ, அல்லது குடும்பத்திலே - இல்லாமல் போனால் விரைவில் ஒரு ஒழுங்கின்மை யே உள்ளே நுழையும் என அறிந்திருந்தார். இரண்டு எஜமானர்களை ஒரு குடும்பம் கொண்டிருந்தால், ஒருவருக்கொருவர் எதிராகத் திரும்புவார்கள், பிரித்திருப்பார்கள் மற்றும் வீழ்ச்சியடைவார்கள். தேவன் புருஷனையே குடும்பத்திற்கு தலையாகத் தெரிந்து கொண்டார். "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக் கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" (1 கொரிந்தியர் 11:3) என்று பவுல் எழுதினார். இது தேவனுடைய "சங்கிலித் தொடர் கட்டளை."

குமாரனாகிய தேவன் பிதாவாகிய தேவனுக்கு சரிசமமாயிருக்கிறார். பிலிப்பியர் 2:5-7 சொல்லுகிறது, "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்." தேவனுடைய குமாரன் மனமுவந்து பிதாவாகிய தேவனுக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார் - சமமானவரல்ல என்ற அடிப்படையில் அல்ல, ஆனால் தேவனுடைய சங்கிலித் தொடர் கட்டளையின்படி மனிதனுடைய வெற்றிகரமான மீட்பினிமித்தம் அது அவசியமாயிற்று.

தன் புருஷனுக்குக் கீழ்ப்படியாத ஒரு மனைவி தன்னுடைய வாழ்க்கையிலே அநேக பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும், முதலாவதாக, *தேவனிடத்தில்* அவளுக்கு மிகவும் வினயமிக்க பிரச்சனையாகும். ஒரு மனைவி தன்னுடைய புருஷனின் தலைமைத்துவத்திற்கு ஈர்க்கப்படாத போது, அவளுடைய உண்மையான பிரச்சனை அவளுடைய புருஷனோடு அல்ல. அவள் கீழ்ப்படிய வேண்டும் என்று சொன்ன தேவனோடுதான் அவளுக்குப் பிரச்சனை. எனவே, அவள் ஆவிக்குரிய பிரச்சனைகளை சந்திக்க வேண்டும்: அவளுடைய ஜெப வாழ்வில் பிரச்சனை, வேதக்கல்வியில் பிரச்சனை, மற்றும் அவள் தேவனிடத்தில் கொண்டுள்ள உறவுமுறையில் பிரச்சனை.

கீழ்ப்படிதலில்லாத ஒரு மனைவி தன்னுடைய *புருஷனோடும்* கடினமான சூழ்நிலையைக் கொண்டிருப்பாள். ஒரு மனைவி தன்னுடைய புருஷனின் அதி காரத்தை கனப்படுத்த மறுக்கும் போது, தன்னை முழுமையாக்குபவனோடு தொடர்பில்லாதவளும் அவனுக்கு முடமானவளுமாயிருக்கிறாள், அவள் தன்னுடைய புருஷனுக்கு தேவன் கொடுத்த கடமையை தன் குடும்பத்தில்

நிறைவேற்ற ஆசைப்படுவதை தடை செய்பவளுமாயிருக்கிறாள். அவள் பின்பற்றாவிட்டால் அவனால் அவளை நடத்த முடியாது.

அவளுடைய *பிள்ளைகளும்* அவளுக்குப் பிரச்சனைகளைக் கொடுப்பார்கள். தன்னுடைய புருஷனின் தலைமைத்துவத்தை புறக்கணிக்கிற ஒரு மனைவி ஒருபோதும் தன் பிள்ளைகளிடத்திலிருந்து முறையான மரியாதையைப் பெற மாட்டாள். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறது, ஆனால் அவர்கள் கீழ்ப்படிகிற அளவுக்கு அவர்கள் எப்படிப்பட்ட தாயாக இருக்கிறார்கள்? தான் ஆவியினால் நிறைந்து, ஆவியினால் நிறைந்த புருஷனுக்குக் கீழ்ப்படிகிற தாய்களுக்கே பிள்ளைகள் கீழ்ப்படிவார்கள். தாய் கலகம் பண்ணுகிறவளும் மூர்க்க குணமுள்ளவளுமாயிருந்து தன்னிஷ்டப்படி நடப்பாளானால், பிறகு அவளுடைய பிள்ளைகள் அதைப் பார்த்து, அநேகமாக அதே வழியில் தான் அவளுக்குப்பதிற்செய்வார்கள். அவள் தானே கொடுக்காததை அவர்களிடத்தில் எதையும் கோரமுடியாது.

அப்படிப்பட்ட மனைவி *தனக்குத் தானே* பிரச்சனையாக இருப்பாள். தனக்கு தேவன் கொடுத்த கடமையை செய்யாமல் அவள் முரண்டு பிடிப்பது அவளுக்கே தெரியும். அப்படிப்பட்ட அவளுடைய அறிவு அவளுடைய மனதை உறுத்திக் கொண்டேயிருக்கும். மேலும், மனைவிக்கு குறிப்பிட்ட தேவை இருக்கக் கூடும் அவளுடைய புருஷன் அந்தத் தேவைகளை ஒழுங்கு செய்யும் வரை அவள் முழுமையாய் தானே சந்தித்துக் கொள்ள இயலாது, அதற்கு அவள் அவனுடைய அதிகாரத்தை ஏற்று கீழ்ப்படிய வேண்டும்.

*(3)* விளைவுகள்: ஆகையால், "சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" *(5:24)*. அநேகம் பெண்களுக்கு இந்த வார்த்தைகள் கோபமூட்டுதலாக உள்ளது. அப்படிப்பட்ட மனோபாவம் கொண்டவள் வாழ்வில் வருகிற மகாப் பெரிய கொள்ளையை மேலோட்டமாய் விட்டு விடுகிறார்கள்: கீழ்ப்படிதல் ஒருவரின் சுதந்திரத்தை எடுத்து விடுவதல்ல; அது உண்மையில் சுதந்திரத்தைக் கொண்டு வருகிறது. புருஷன் ஒரு அவிசுவாசியாகவோ அல்லது ஒரு தேவனுடைய போதனைகளை மீறுகிறவனாகவோ இருந்தால் என்ன செய்வது? "எந்தக் காரியத்திலும்" கீழ்ப்படிய வேண்டும் என்பது இதையும் உள்ளடக்கியதா? இதோ எளிதாக வழி காட்டும் போதனை: அது தேவனுடைய சித்தத்தை *மீறினாலொழிய* எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அவளுக்குக் கொடுக்கப்படும் கட்டளை அவளுடைய புருஷனுடைய தீர்மானத்துக்கு அவளுடைய ஒப்புதலையும் உட்படுத்தியது என்பதல்ல; அவள் கேட்டுக் கொள்ளும் காரியத்துக்கு கீழ்ப்படிய அவள் விரும்பினால் மட்டுமே என்பதுமல்ல. தன்னுடைய புருஷனுக்கு கீழ்ப்படிய வேண்டிய பொறுப்பிலிருந்து விடுதலை பெறுகிற ஒரே கோட்பாடு என்னவெனில் அவன் தேவனுடைய பரிசுத்த அளவுகோலிலிருந்து முரணாக வேறுபட்ட வழிக்கு அவளை நடத்துகிற செயல் மட்டுமே.

தன்னுடைய நாட்களிலிருந்த மதத்தலைவர்களிடம் பேதுரு தான் இயேசுவை பிரசங்கம் பண்ணக் கூடாது என்று கட்டுப்பாடு பண்ணினபடியால் அவர்களைப்பார்த்து, "... தேவனுக்குச் செவிகொடுக்கிறதை

பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே" என்றார்கள் (நடபடிகள் 4:19, 20). மனித அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவதும் தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிற காரியமும் முரணாக அமையுமானால், பிறகு கிறிஸ்தவர்கள் முதலாவதாக தேவனுடைய அதிகாரத்துக்கே கனத்தைக் கொடுக்க வேண்டும்.

கிறிஸ்தவனாயிருக்கிற மனைவி கிறிஸ்தவனல்லாத புருஷனின் தலைமைத்துவத்துக்கு விட்டுக்கொடுக்கும்படி பேதுரு வழிகாட்டுகிறார் (1 பேதுரு 3:1, 2). ஆகிலும் பேதுரு "எல்லாவற்றிலேயும்" எனும் சொற்றொடரை சேர்க்க வில்லை. கிறிஸ்தவனல்லாத ஒரு புருஷன் அவள் (அவனுடைய மனைவி) கீழ்ப்படிய ஒத்துக் கொள்ளக் கூடாத ஒரு காரியத்தைச் செய்ய அவளிடத்தில் கேட்கக் கூடும் என்று அறிந்தே அதை விட்டு விட்டார்.

5:24 ல் பவுல் மனைவிகள் "எந்தக் காரியத்திலேயும்" கீழ்ப்படிந்திருக்கக் கடவள் என்று சொன்னபோது வசனப்பகுதி மிகவும் தெளிவாயிருக்கிறது. அவர் ஆவியினால் நிறைந்த ஒரு மனைவியிடம் ஆவியினால் நிறைந்த ஒரு புருஷனுடனான உறவுமுறை என்ன என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட ஒரு புருஷன் எந்த ஒரு காரியத்திலும் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக தனது மனைவியை வழி நடத்த மாட்டான். ஆகையால், ஆவியினால் நிறைந்த ஒரு மனைவி "எந்தக் காரியத்திலும்" தன்னுடைய புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருக்க முடியும் மற்றும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்படிச் செய்வதால் மட்டுமே அவள் தன்னை முழுமைப்படுத்துகிற தன் புருஷனிடமிருந்து உண்மையான திருப்தியையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ள வழிகாண முடியும்.

*முடிவுரை.* ஒரு புருஷன் தனது மனைவிக்கு காட்டுகிற அன்பு தெரிவு செய்து கொள்ளுகிற ஒன்றல்ல. ஒரு புருஷன் தன்னுடைய மனைவியினிடத்தில் அன்புகூர நேர்மையான முயற்சியை எடுப்பானானால், இதைத்தான் இயேசு தமது சபைக்குச் செய்தார், புருஷன் புதியதும் உணர்வுபூர்வமானதுமான ஒரு கட்டுக் கோப்பை தனது மனைவியினிடத்தில் கண்டு பிடிப்பான். பிறகு அவள் கீழ்ப்படிய வழிதேடுவாளானால், இருவரும் தேவனுடைய திட்டத்தின்படியான உச்சக்கட்ட திருமண வாழ்க்கையைக் காணமுடியும்.

கிறிஸ் புல்லார்டு

**புருஷனின் கடமை (5:23-31)**

5:23-31ன் படி, புருஷர்கள் தங்களுடைய மனைவிகளுக்கு மூன்று வழிகளில் தங்களுடைய முறையான கனத்தைச் செலுத்துகின்றனர்:

*அவர்கள் தங்களுடைய மனைவிகளுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தை அளிக்கின்றனர்* (5:23). புருஷர்கள் தங்கள் மனைவிகளுக்கு "தலையாயிருக்கிறார்கள்" என்ற உண்மையானது, அவர்கள் வழிநடத்துகிறவர்களாயிருக்கிறார்கள் என்றும் தங்கள் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அர்த்தப்படுகிறது.

*அவர்கள் தங்களுடைய மனைவிகளில் அன்புகூர வேண்டியவர்கள்* (5:25). சுய தியாக மனப்பான்மை கொண்ட அன்புடன், "கிறிஸ்து சபையிலே

*அன்புகூர்ந்து அதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தது" போல அன்புகூர வேண்டும். அவர்கள் தங்களுடைய சொந்த தேவைகளைக் காட்டிலும் தங்கள் மனைவிகளின் தேவைகளில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.*

*இந்த அன்பு உயர்த்துகிற அன்பு (5:26, 27). புருஷர்கள் தங்கள் மனைவிகளுக்கு ஊக்கமளித்து அவர்களை கட்டி எழுப்ப வேண்டியவர்கள். கிறிஸ்துவின் அன்பினிமித்தம் சபை அங்கத்தினர்கள் வளர்வதற்கு ஏதுவாக்கப்படுவது போல, மனைவிகள் தங்கள் புருஷர்கள் தங்களுக்கு இல்லாதிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது (தங்கள் புருஷர்களால்) சிறப்பான நபர்களாகின்றனர்.*

*இந்த அன்பு போஷித்துக் காப்பாற்றுகிற அன்பு (5:28-30). "காப்பாற்றுவது" என்பது மதிப்பையும் நல்லுணர்வையும் குறித்துப் பேசுகிறது (காண்க 1 தெசலோனிக்கேயர் 2:7). "போஷித்தல்" என்பது ஒரு தோட்டம் வளர்வதற்கேதுவான கவனம் எடுத்துக் கொள்வதைக் குறிக்கிறது. ஒரு தோட்டக்காரன் நட்டு, உரமிட்டு, தனது தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுகிறான், அதே போல புருஷர்கள் தங்களுடைய மனைவிகளின் நலனுக்காக பராமரிப்புச் செய்யும் போது புருஷர்கள் தங்கள் மனைவிகளைப் புரிந்து கொள்ளவும், கனப்படுத்தவும் வழிதேடுகின்றனர் (காண்க 1 பேதுரு 3:7). அவர்கள் அவர்களுடைய முக்கியத்துவத்தைக் காட்டத்தக்க வழிகளை கண்டு பிடிக்க வேண்டும்.*

*அவர்கள் தங்கள் மனைவிகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் (5:31). புருஷர்களும் மனைவிகளும் "ஒரே மாம்சமாகியிருக்கிறார்கள்." அவர்கள் வாழும் வரை ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.*

ஜெய் லோக்ஹார்ட்

---

குறிப்புகள்

[1]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 869. [2]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 126. [3]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 154. [4]Wuest, 126. [5]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 220. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 982. [7]Wuest, 127. [8]Zodhiates, 948. [9]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 346. [10]Josephus *Antiquities* 7.12.3. [11]Bullinger, 761. [12]Wuest, 227. [13]M. C. Kurfees, *Instrumental Music in the Worship* (Nashville: Gospel Advocate Co., 1950), 16. Studies of singing written by Owen D. Olbricht, Hugo McCord, and Jack P. Lewis are included in "Worship," *Truth for Today* (March 2003): 27–31 and "The Question of Instrumental Music," *Truth for Today* (March 2008). [14]Kurfees, 48. [15]Zodhiates, 964. [16]Wuest, 129. [17]Lincoln, 365. [18]Wuest, 130. [19]Zodhiates, 942. [20]Lincoln, 368. [21]Ibid., 372. [22]Ibid., 373. [23]Wuest, 131. [24]Ibid., 132. [25]Zodhiates, 928. [26]Lincoln,

377. [27]Ibid. [28]Zodhiates, 942. [29]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament*, ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:370–71. [30]Bullinger, 537. [31]Ibid., 146. [32]Ibid., 279. [33]J. A. Robinson, *St. Paul's Epistle to the Ephesians,* 2d ed. (London: Macmillan & Co., 1904), 127. [34]Lincoln, 385. [35]Alexander Campbell, *The Christian System* (St. Louis: Christian Publishing Co., 1835), 231. [36]Eusebius Pamphilus *The Life of the Blessed Emperor Constantine* 4.62. [37]Campbell, 232. [38]William Shakespeare *Much Ado About Nothing* 3.5.